ஸ்ரீஹ்மவித்யா.

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ்மீ ௴. ௨ சிதம்பரத்திற் பிரசுரம் செய்யப்படும்

புத்தகம் - க.] கஅஅஎ - ௵ ஜனவரி-மீ ௴. [இலக்கம் - அ.

ஸ்ரீநடேசஸ்ய					ஸங்க்யா	
ஸம்வத்ஸரஸ்ய	க	௰உ	,,	உ	ச	,,
ஷாண்மாஸிகஸ்ய	க	,,	,,	க	ச	,,
த்ரைமாஸிகஸ்ய	,,	கூ	,,	,,	௰	,,
ஸஞ்சிகாயா:	,,	௩	௬	,,	ச	,,

சந்தா விவரம்

	இந்தியாவிற்கு-				இலங்கைக்கு-		
௵	1 - இ	1	12	0	2	4	0
மீ	6 - இ	1	0	0	1	4	0
மீ	3 - இ	0	9	0	0	10	0
காபி	1 - இ	0	3	6	0	4	0

விஷயா: பத்ரஸங்க்யா

ஶ்ரீவால்மீகிராமாயணஸங்க்ஷேப: ௱௰௪

ஆத்மா, ஶரீரஞ்ச. ௱௰௬

ஸ்மார்த்தப்ராஹ்மணவிஷயகஸந்தேஹ: ௱௨௰

ஹிந்துதத்த்வப்ரபாவ: ௱௨௨

கலியுகவித்யா ௱௨௩

கிம்ஸுஷுப்தௌ ஜகதஸ்தி ௱௨௫

விவாத: ௱௨௬

விஷயங்கள் பக்கம்

ஸம்ஸ்கிருதபாஷை. ௱௰௬

ஆத்மாவும், சரீரமும். ௱௰௫

ஸ்மார்த்தப்பிராமணர்களுடைய உட்பிரிவு- ௱௰௮

ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் பூஜாவிஷயம் ௱௨௰

இந்துதத்துவபிரபாவம். ௱௨௧

கலியுகவித்தை ௱௨௧

சுழுத்தியின்கண் உலகுண்டாவென்பது. ௱௨௪

சம்பாஷிணை ௱௨௫

இஃது சிதம்பரம் ப்ரம்மவித்தியா ப்ரேஸ்தலைவரால் பதிப்பித்து வெளிப்படுத்தப்பட்டது.

மதம்.

வேதத்தையே மூலப்பிரமாணமாகக்கொண்ட நமது மதஸ்தர்கள் பற்பல பேதங்களுண்டாகி, பிரமாணத்தை அப்பிரமாணமாகவும், அப்பிரமாணத்தைப் பிரமாணமாகவும் கொண்டு, பலபிரிவுநூல்களை உண்மையயாராயாதவரை மருட்டிப் பகைமூட்டிவிடுகின்றனர்- மத துரபிமானிகளால் வந்திருக்குங் கெடுதிகள், இத்துணையெனக் கூறற்பாற்றோ? முன்பினுள்ள முரண்களைத் தக்கவரிடங் கேளாதும், கூறுபவரைத் துரபிமானத்தால் வைதும் வருவதால் உண்மை வெளியாவதெங்ஙனம்? இவர்க்கு உண்மை வெளியாகவேண்டின் வைதல் ஆவசியகமன்றே- "தாம் பிடித்தமுயலுக்கு மூன்றே கால்" என்பதற்கிணங்க, தாம் அபிமானித்ததற் கொருசிறிதுங் குறைவுறாதிலையாக்க, அசத்தியத்தைச் சத்தியமாக வரைந்தும் வாதாடியும் உபந்நியசித்தும் வருவது, கடவுளிடத்து நிஜமான பக்தியும் பயமுமுள்ளவர்க்கு ஒருபோது மிராதென்பதே துணிபு- எம்மதத்தவரேனும் உண்மையும் பத்தியுமுளராயின், அவர் மனோசாக்ஷிக்கு மாறுபாடின்றிக்கூறுவர்; பிறர் மதிக்க வாசாகயிங்கரிய வேடம்பூண்டு வெளிவந்தோரா அதற்கு மாறுகக்கூறுது என்செய்வர்? இவராலேயே புறமதஸ்தர் அவமதிக்கவிடமாயிற்று- சிலர், தமது துரபிமானத்திற்கு ஆனி வருமென்றஞ்சி "அந்நூலைப்பாராதே, யிந்நூலைப்பாராதே" என்றும், தாம் குறிக்கும் நூல்களையே பாரெனவும் சூதாய்ப்போதிக்கும் துர்ப்போதனைகளைக்கேட்டு மயங்கி அங்ஙனமே பார்த்துப் பிறர்கொள்கைகளைச் சிறிதும் அறியாமலே வையத்தொடங்கி, மகாத்துமாக்களையெல்லா மிகழ்ந்து நிந்தியாநின்றனர்- பற்பலமத நூல்களையும் ஆராய வலியின்றேல் புறமதங்களைத் தூஷித்தல் தக்கதன்று; வலியுளதேல் அபிமானத்தையொழித்து அததுணர்ந்தார்பால் கேட்டுத் தர்க்கித்துத் தேறியதை நியாயவாயிலாகக் கூறக்கடவர்- இங்ஙனம் புரிவாரேல் இந்துமதமிவ்வாறு குறைவடைந்திலது- பலவேறுபட்ட உள்மதத்தவர்கள் தந்தம் மதமே உண்மையென்று நாட்டி நூல்களியற்றுவாராயின் எதைச் சரியென ஒத்துக்கொள்வது? ஒவ்வொருவரும் தமதுமுன்னோரியற்றியதே சத்தியமெனின் ஒன்றையே வேறுவேறாகக்கூறும் யாவுமே சரியென அங்கீகரித்த லெங்ஙனமாகும்? இவற்றிலுண்மை யிது வெனப் பாரபக்ஷமின்றித்தெளிதல் ஆவசியகம்- இங்ஙனமின்றித் துரபிமானத்தோடு தங் கொள்கைக்கு மாறு வரப்படாதெனக்கருத்துக்கொண்டு நோக்குவார்க்கு உண்மை வெளியாவது யாங்ஙனம்?

துரபிமானத்தால் உண்மையை யின்மையாகவும், இன்மையை உண்மையாகவும் சித்தாந்தம் செய்துகொண்டு, முற்றும் வேறுபட்ட மதஸ்தரோடு வாதம் புரியின் எங்ஙனம் வெற்றிபெறுவர்? கற்பனையைக் கற்பனையெனவும், யதார்த்தத்தை யதார்த்தமெனவும் கூறி வாதஞ்செய்யின் வெற்றிபெறத் தடையிலது- அங்ஙனமின்றித் தாமே அபதார்த்தத்தை யதார்த்தமென்றும், யதார்த்தத்தை அயதார்த்தமென்றும் சித்தாந்தம் செய்துகொள்ளின், புறமதத்தாரால் அவமானத்துடன் தோல்வியுமடையத் தடையுளதோ?

சாத்திய மிஃதென்றும், சாதன மிஃதென்றும் உள்ளபடி உணர்ந்தாலன்றி நமது சமயம் நிலைபெறாது- அங்ஙனம் நிலையாகாவிடினும் ஆகுக, நமது கொள்கை மாறப்படாதெனும் வைராக்கிய சீலர்க்கு யாமுரைப்பதியாதுளது? அவர் நமது சமய விருத்தியை நாடினவரன்றென்பதன்றி வேறொன்றுங் கூறகில்லேம்- இது நிற்க, உண்மையை நோக்கும் இந்துமத சகோதரரே! மதவாராய்ச்சிபுரிந்த பல்லோர்பால் சுருதியுக்தி அனுபவசகிதமாகப் பல்கால் விசாரணைசெய்து பின்பு தெளியக்கடவீர்- துரபிமானிகள் இன்னாரென முன்னர் உணர்ந்து அவர்பால் செல்லாதொழிதல் நன்று- அங்ஙனம் புரியாது சித்தாந்தார்தஞ் செய்து இன்ன சித்தாந்தமென வெளியுங்காட்டி, பின்பு அதை மாற்றிக்கொள்வது கஷ்டசாத்தியமாகிப் பொய்யை மெய்யாகவும், மெய்யைப் பொய்யாகவும் மனச்சான்றுக்கு நேர் விரோதமாகப் பேசநேரிட்டு இங்ஙனம் பேசுவது நீதியன்றென வுணர்ந்தும் மானம்போவதுபற்றி அங்ஙனம் பேசவும் சம்பவிக்கிறது- உற்று நோக்குழி இவ்வாறான துரபிமானிகள் அநேகருளர்- அவரின்னாரென் உணர்தல் ஆவசியகமாகும்.

நமது சமயசிரசில் அநேக ரகசியங்கள் இருக்கின்றன; அவற்றை யிங்குள்ள சில துரபிமானிகள் மறுத்துரைக்கின்றதோடு முற்றும் நிந்திக்கின்றனர்- புறதேசவாசிகளோ உண்மையைக்கண்டு பிரசாரம் செய்து வருகின்றார்கள்- ஆங்கிலேயபாஷையில் வல்ல நம்மவர்க்கு மேற்படி ரகசியங்களைப் பூர்வபக்ஷ மதிவாதிகள் யுக்திககுப் பொருத்தமாய்க்கூறாது, பின்பு பூர்வபக்ஷப்படும் சித்தாந்தங்களைக் கூறுவதில், அவர் வெறுப்புற்று அவிசுவாசங்கொள்கின்றனர்- மேதாவிகளான அவரை, தக்க சமாதானம் சொல்லித்திருப்பாது வாளா நிந்திடபதில் பயன் யாது?

இதுகாறும் கூறியதின் கருத்து யாதெனின், நமது மதத்தின் உண்மையை உண்மையாகவே உணர்தல்வேண்டுமென்பதேயாமின்னமதம் குற்றமுளது, இன்னமதம் குற்றமிலது எனக்கூறினேமல்லேமாகலின், அறிவுடையார் சத்து இன்னதென வாராய்ந்து தெளிவாராக.

உண்மைநாடுவோன்

குறைவுகள்.

இத்தேசத்தார்க்குப் பிழைப்பு தினே தினே மட்டுப்படுகின்றது; வரிகளோ கணக்கில்லை; நாட்டுப்புறத்து ஏழைகள் படும் துன்பம் சொல்லிமுடியாது; ஒற்றுமையும் தேசாபிமானமுமில்லை; பட்டணவாசங்களில் மாத்திரமன்றி வெளியில் கல்வி வெகு பூஜ்ஜியம்; பத்திரிகைகளை லக்ஷியம்செய்து படிப்பாரில்லை; மத சித்தாந்தம் தெரியாமல் மயங்குகின்றனர்; கிறிஸ்துமதத்தில் நமது ஜனங்கள் இன்றும்போய்க்கொண்டிருப்பதால் நமது மதஸ்தர்தொகை குறைந்துவருகின்றது; கவர்னமெண்டார் இருக்கும் கல்விச்சாலைகளையும் குறைக்கக்கருதுகின்றனர்; தொழிற்சாலைகளிங்கில்லாமையால் ஆங்கிலேய தேசத்திலுள்ள தொழிற்சாலைகளினின்றே இந்துதேசத்திற்கு வேண்டும் எல்லாச்சாமான்களும் வருகின்றன; இதனால் அத்தேசத்தார்க்குப் பிழைப்பும் இத்தேசத்தார்க்கு அஃதில்லாமையுமாயின- இவர் பலவீனர்; தைரியமில்லாதவர்; அந்நியர்க்கடிமைப்படுபவர்; சூரரல்ல; வீரருமல்ல; சபைசேர்ந்து தம்கஷ்டங்களை நிவர்த்திசெய்துகொள்ள வகை அறியாதவர்; இவைபோல எத்தனையோ குறைவுகளுளவாயிருக்கின்றன- இவற்றை ஒவ்வொருவரும் சிந்தித்துப் பரிகாரந்தேடிக்கொள்வது அத்தியாவசியம்.

குறைகூறும் குற்றவாளி.

ப்ரஹ்மவித்யா

ப்ரம்மவித்தியாபத்திரிகை

பிரதி இங்கிலீஷ் மீ ௰௫ உ சிதம்பரத்திற் பிரசுரம் செய்யப்படும்

புத்தகம் - க.] கஅஅஎ - ஹு ஜனவரி-மீ ௰௫. [இலக்கம் - அ.

ப்ரஹ்மவித்யா

கீர்வாணபாஷா புராணம்

[அநுபந்தः]

புராணேஷு ஸர்வவித்யாஸாரஶ்ரேணிதயா ப்ரதமதः ஶ்ரூயமாணபுராணவிஷயம் ப்ரதிகல்ப்ய ப்ரஸ்தூயதே । அக்நிபுராணம் [illegible] வஸிஷ்டாய ப்ரோக்தம் । நாஸாவஹ்நिः ஸாக்ஷாத்பாகாத்யுபயுக்தோ [illegible] விஶேஷः கிந்து தேஜஸாம் [illegible] ஶ்ரீமந்நாராயணாம்ஶः ஶ்ரீ[illegible] காலாக்நிருத்ரஸ்வரூப: [illegible] ப்ரமுகதைவதம் । தேவः காலாக்நிः । [illegible] ஸர்வப்ராஹ்மணகுலஶிரோமணிः பகவதோ பாதராயணாசார்யஸ்யாபி வஸிஷ்டோ [illegible] । தத்ர ச க்ரமேண ஸர்வவித்யாப்ரதிபாதநமிதி தஸ்ய ஸர்வவித்யாஸார இத்யபி வ்யவஹாரः । ததா தஸ்மிந்நேவ புராணே, உபக்ரமேணைவ “வித்யாஸாரம் புராணம் யத்ஸர்வம் ஸர்வஸ்ய காரணம்” ததா [illegible] ரணம் ச தத்ர । ஸர்வாஸாமபி வித்யாநாம் ஸம்க்ரஹः ப்ரதர்ஶிதः । யதா ப்ராரம்ப ஏவ “த்வே வித்யே வேதிதவ்யே ஹி” “த்வே வித்யே பகவாந்விஷ்ணுः பரா சைவாபரா ச ஹ” இதி ப்ரஸ்தாவ்ய தாஸாம் ச வித்யாநாம் “ருக்யஜுஸ்ஸாமாதர்வாக்யா வேதாங்காநி ச ஷட் த்விஜ । ஶிக்ஷா கல்போ வ்யாகரணம் நிருக்தம் ஜ்யோதிஷாம் கதिः । சந்தோऽபிதாநம் மீமாம்ஸா தர்மஶாஸ்த்ரம் புராணகம் । ந்யாயவைத்யக காந்தர்வம் தநுர்வேதோऽர்தஶாஸ்த்ரகம் । அபரேயம் பரா வித்யா யயா ப்ரஹ்மாபிகம்யதே । யத்ததத்ரேஶ்யமக்ராஹ்ய

ப்ரம்மவித்தியா.

ஸம்ஸ்கிருதபாஷை.

புராணம் (தொடர்ச்சி)

புராணங்களுள் எல்லா வித்தைகளின் சாரம் அடங்கி உள்ளதாதலால், முதலில் அக்கினிபுராணம் என்கிற புராணத்தை எடுத்து எழுதுவோம். இப்பெயர்கொண்ட புராணம் ஸ்ரீமத் அக்கினிபகவான் வஸிஷ்டமாமுனிவரைநோக்கி உபதேசித்தருளியது. இவ்விடம் சொல்லப்படும் அக்கினிபகவான் என்பவர் நமது கிருகங்களின் அடுக்களையில் உள்ளநெருப்பென்று கொள்ளல்கூடாது. இவரோ உலகத்திலுள்ள ஒளிகளுக்கெல்லாம் அபிமானியும், ஸ்ரீமான் நாராயணமூர்த்தியின் திருவுருவாய் எழுந்தருளியும், ஸ்ரீகாலாக்னி ருத்திரமூர்த்தியாயும் நின்றவர். உயர்குலத்தார் வழிபட முதல் கடவுளாயுள்ளவர். காலாக்னி என்னும் திருநாமம் பூண்டவர். அங்கு கேட்பவரும் அந்தணர்குலத் தருந்தவப்பயனாய் ஸ்ரீமத் வேதவியாசமுனிவர் என்கிற ஸ்ரீமான் வாதராயணாசாரியருக்கும் குருமணியாய ஸ்ரீ வஸிஷ்டமுனியென கொள்க. அப்புராணத்தில் முறையே எல்லா வித்தைகளும் குறிக்கப்பட்டுள்ளனவாகையால் அப்புராணத்தை ஸர்வவித்தியாசாரம் எனவும் வழங்குவதுண்டு அவ்விதமே அதே புராணத்தில் தொடங்கும்பொழுது “வித்யாஸாரம் புராணம் யத்ஸர்வம் ஸர்வஸ்ய காரணம்” இப்புராணம்வித்தியாசாரம்என்றும்மற்றவற்றிற்குகாரணம்என்றும்சொல்லப்படும்,,என்றுகூறப்பட்டுள்ளது. அவ்விதம்பெயருக்குதக்கபடி ஆங்காங்கு எல்லாவித கல்விக்குப்புகளின் ஸ்வரூபங்களும் வெளியிடப்பட்டுவருகின்றன. முதலிற்றானே “த்வே வித்யே வேதிதவ்யே ஹி” இரண்டு வித்தைகள் அறியவேண்டும் என்றும் “த்வே வித்யே பகவாந்விஷ்ணுः” இருவகை வித்தைகளும் ஸ்ரீவிஷ்ணுவின் ஸ்வரூபமே என்றும், ஒருவா[...] துரைத்து அவைகளின் பெயர்களையும் [...] வர்வாக்யாவேதாங்காநி ச ஷட் த்விஜ। [...] கரணம் நிருக்தம் ஜ்யோதிஷா[...]

[illegible]

[illegible]'' இருக்கு, யஜுஸ், ஸாமம், அதர்வணம் சிக்ஷை, வியாகரணம், கற்பசூத்திரங்கள், நிருத்தம், சோதிகளின்வழி (அதாவது அகாயத்தில் உலாவிவரும் கிருகங்களுடைய நடைகளைக்காட்டும் கருவியாகிய சோதிடம்) சந்தம் (யாப்பு) மீமாஞ்சை (கன்மநூல்) தர்மசாஸ்திரம்; புராணங்கள், தர்க்கம் வைதிகம், காந்தர்வம் (சங்கீத சாஸ்திரம்) தனுர்வேதம் (இராணுவத்தொழிலைக் கற்பிக்கும் பெருநூல்) அர்தசாஸ்திரம் (அரசர்கள் உலகத்தை ஆண்டு பொருள்பெருக்கும் கருவியாய்நின்ற நூல்) இவைகள் எல்லாம் அபாரவித்தையென்றும், எவ்விதநூலைக்கற்றவன் எளிதில் பிரமாணங்களைக்கடந்த பேரொளியாய பரவத்துவின் உண்மை தெளியவறிவானே அந்த வித்தை (அதாவது உபநிடதம்) பராஎனவும், பொருள்படத்தக்க சில செய்யுட்களால் எடுத்துக்காட்டியதுமன்றி இல்லற வாழ்கைக்கேற்ற நூல்களாய விஞ்ஞானநூல்களை அபரா என்கிற பெயராலும் பேரானந்தப்பெருங்கருவியாய நூல்களை பரா என்கிற பெயராலும்வழங்கிஅவ்விருவகைவித்தைகளையும் விரிக்கவெழுந்து அவைகளின் அங்கமாயுள்ள மற்றவையும் சேர்த்து நன்கு அவ்வித்தைகளின் சொரூபம் இப்புராணத்தில் விளக்கப்பட்டது. அவற்றில உள்ள விஷயங்கள்; அக்கற்பத்தில் ஸ்ரீமன்னாராயணன் திருவதாரங்களின் பெருமையும், மனுவந்தரங்களின் சிற்சில சரித்திரங்களும் அனேக சம்ஸ்காரங்களும், ஹோமங்களும், அவைகளின் பயனும், வீடுகள் தேவாலயங்கள் முதலியவற்றின் சிற்பங்களும், ஆவடை, லிங்கம், ஸாளக்கிருமம் முதலியவற்றின் லக்ஷணமும், யுக்திக்கொத்தபடி அவைகளின் பிரயோஜனமும், அனேக பிம்பங்கள் செய்யவேண்டிய வழிகளும், அந்தந்த பிம்பங்களுக்கு அனேக பூதசக்திகளைச் சேர்க்கத்தக்க அனேக பதார்த்தங்களின் அமைப்பாகிய அதிவாஸத்தையும் இவர்கையிலுள்ள தேகசக்தியை வேறுபடுத்தவேண்டிய கருவிகளான அனேக முத்திரைகளும், ஜீர்ணோத்தாரணமும், குளம் கிணறு முதலிய விஷயங்களை உண்டுபண்ணவேண்டிய முறையும், கற்களின் இலக்கணம், இரத்தினங்களின் பரீக்ஷை, நக்ஷத்திரங்களின்வழி, அனேகமான ராஜதர்மங்கள், அனேக விவகாரங்கள், அதற்குள்ள தர்மங்கள் விருதங்களின் பிரயோஜனம், அனேக விருதங்கள், சந்தியாவந்தனம், காயத்திரீமகாமந்திரப்பெருமை, தண்டனங்கள் யுத்தம்புரியும்வழிகள், சகுனங்களின்லக்ஷணம், பூமிசாஸ்திரம் ஸ்ரீராமன் அருளிய நீதிசாஸ்திரம், தானப்பிரயோஜனம், சித்தர்களின் ஔஷதம், அனேக கற்பங்கள், குதிரை சிகிர்சை, யானைசிகிச்சை, சாந்திகம், மந்திரபரிபாஷை, பாம்புகளினிலக்கணம், விஷசிகிச்சை, அநேகமந்திரங்கள், காலத்தின் அளவு, அனேக கிருகங்களின் நிலை, பூமியின் நிலை, வேதங்கள், ஆறு அங்கங்கள், அர்த்தசாஸ்திரம், ரஸவிலக்கணம், காவியங்களின் இலக்கணம், அலங்காரசாஸ்திரம், எண்வகையங்கங்களுடன்கூடியயோகம், அனேககர்மங்கள், சரீர உருபுகள், அவற்றின் பிரயோஜனம் எனத்தொடங்கி பற்பல என்று துணியப்பட்டன. இவைகளைக்கற்பது நாத்திகக்கொடியை நறுக்க ஓர் பெரும் வாளாய் நின்று ஆத்திகத்தில் நல்ல நம்பிக்கையும் உண்டாக்கியும்விடும்

[illegible]

என்பது திண்ணம். ஆயினும் இப்புராணத்தில் பாமரர்கேட்டுக்களிக்கக் கருவியாய்நிற்கும் கதைகள் முற்றிலும் இராமையால் வயற்றுக்குப் பௌராணிகரான இத்தேசத்தவர் இப்புராணத்தை கைவிட்டார்கள். அந்தோ! என்செய்வோம்! என்செய்வோம்!! கலியின் மகிமை! மகிமை!! அரும்பொருள்களை விளக்கும் கருவியாய் ஸ்ரீவாதராயணமுனிவர்கோமான் முகமலரில் பிறந்து வளந்தோங்கிய மகாபுராணங்கள் நமக்குத் துணையிருக்க அவைகளை ஒழித்து, பிழைப்புக்கென வெகு புகழ்மொழிகள் நிறைந்ததும், கற்பிதவசனங்களின் களஞ்சியமும், அறிவற்றவர்முகத்திற் குடிகொள்ளுமியல்புள்ளதும், புராணங்களின் பாவங்கள் உருவெடுத்ததெனச் சொல்லத்தக்கவையும் புராணப்பெயரால் புருஷர்களை வஞ்சிக்கும் தன்மையுள்ளதும் ஆகிய புஸ்தகங்களைத்தரித்த போய்ப்புலவர்கள், ஆங்காங்கு பிறந்து திரிந்து தமது புத்திக்குத்தோன்றியபடி அர்த்தஞ்செய்தும் பெரியோரினம்செல்லாது, அவர்கள் திருமொழிகளையும் கவனியாது மகாபுராணங்களையும் ஆராயாது இலக்கணக்குற்றங்கள் குடிகொள்ளும் பதங்களை பலதடவை உபயோகித்துக்கொண்டு சிறிதேனும் கல்விவாசனையற்ற பெண்களுக்கு மனங்களிக்கச்செய்தும் அம்மாதர்களுக்கொப்பான சில மனிதர்களையும் ஏதோ ஒருவிதம் ஆனந்திக்கச்செய்து தீர்த்தங்கள் க்ஷேத்திரங்கள் இவைகளில் புராணிகர்எனபோய்ப்பெயர்பூண்டுபுராணத்தின் பெயரைக்கெடுக்கும் விருதுபூண்டு சில புண்ணியவான்கள் ஆங்காங்கு புராணப்பெருமையை ஒழிக்கவே யெழுந்து திரிகிறார்கள். இவர்கள் இவ்விதம் செய்வதும் ஸம்ஸ்கிருதபாஷை ஒருவழியில் குறைவதும் இவ்விதமே நிலைபெறுமேல் எவ்விதம் நமது புராணங்களின் உண்மை வெளியாகும். ஆகைபால் பொறுமையற்ற கனவான்கள் எவ்விதத்திலும் புராணங்களை முன்னுக்குக்கொண்டுவருவார்கள் என்று நம்பி இவ்விதமாய் புராணங்களின் விஷயங்களை எழுதவெழுந்தோம்.

நிற்க. இத்தேசத்தில் அக்கினி புராணத்தின் அம்சங்களென வழங்கப்படும் துலாக்காவேரிமான்மியம் முதலிய புஸ்தகங்கள் அப்பெரும்புராணத்தில் இன்மையால் அது ஆக்கினேயம் அல்லவென சொல்லும் சிலரை நோக்கி இவ்விதம் விடைகூறுக. ஐயா! அனேக லக்ஷங் கிரந்தசங்கியையுள்ள க்ஷேத்திரபுராணங்கள் பிரமாண்டபுராணத்திலும், ஸ்காந்புராணத்தினும் உள்ளனவென எழுதப்பட்டிருந்தும் குறைந்த கிரந்தசங்கியையுள்ள பிரமாண்டமாவது அளவிலுள்ள ஆறு சங்கிதைகளில் அடங்கி ௫0. கண்டங்களாய் (அகச00) கிரந்தங்கள் உள்ள காந்தபுராணமாவது இந்த் க்ஷேத்திரபுராணங்களுடன் கூடியதாயும் வித்துவான்கள் ஒப்புவாரேல் தீர்த்தவைபவத்தையும் இதிலுள்ளதாய் ஒப்புவார். அதுகொண்டு இவ்வாக்கினேயபுராணத்தைப்படிப்பின் ஆத்திகத்தில் நம்பிக்கையும் மூர்த்திபேதமற்ற பரவஸ்துவின்கண் பக்தியும் உண்டாமென்பது திண்ணம் அதுகொண்டே மச்சபுராணத்திலும் முன்யாம் கூறிய பொருள்வழி வாதராயணமுனிவர் கருத்தெனக் கொள்க. அங்ஙனம் சிவபுராணவிஷயம் வரும்.

ஆத்மாவும், சரீரமும்.

நண்பர்களே! நாம் இதுவிஷயத்தைக்குறித்து எழுதியிருந்த உபன்னியாசத்தில் சிற்சில குற்றங்களைக் கூறவெழுந்த

[illegible]

[illegible]

[illegible]

தத்துவவிவேசினிபத்திராதிபர் எடுத்துக்காட்டிய குற்றங்களு க்கு மறுமொழிகுடுத்ததில் சிலபாகங்களை மறுபடி ௫- வது வாலியம் ௫க. ௭. தத்துவவிவேசினியில் ஆன்மாவும் சரீரமும் என்கிற தலைப்பின்கீழ் குற்றமுள்ளதென எழுதியிருக்கின்றார். அவரது விடாமுயற்சிக்கும் தொட்ட காரியத்தை எவ்விதமா வது தீர்மானஞ்செய்யவேண்டும் என்கிற மனோதைரியத்திற் கும் மிக நன்றியுள்ளவராய் அவர் எடுத்துக்காட்டிய குற்றப் போலிகளை குற்றங்கள் என நம்பும் சிலரை நோக்கி அவற்றில் உள்ள விஷயங்களை மாத்திரம் எடுத்து மறுப்பாம். அதில் முதலில் நாம் எழுதிய வார்த்தைகளுள் இருந்த பிரமதர்க்கம் என்கிற புஸ்தகப்பெயரை அவர் பார்த்து இந்தப்பெயரை தாம் இந்தப் பத்திரிகையைத் தவிர்த்து வேறெங்கும் கேட்டதில்லை என்று அதை எழுதியது ஒரு வழுவாய்க்காட்டி ஒருவாறு அவ ரது சொந்த பரிகாசாஸ்திரத்தைப் பிரயோகித்தார். மேலும் நாம் எழுதிய சிலவிஷயங்கள் சாதாரணதர்க்கசங்கிரகம் படித் தவரும் எடுத்துக்காட்டத்தகாது என்று பரிகசித்தார். அது கொண்டு ஆலோசிக்குங்கால் இவர் மதுராநாதீயம் பக்ஷதர மிச்சிரீயம், ஜாகதேசி, கதாதரீயம் முதலிய பெரிய கிரந்தங்க ளைக்கற்றவர் என்று வெளியாயினும் நமது தேசத்தில் ஸ்ரீமத் ஆனந்ததீர்த்தமுனிவர் மதத்தைச் சார்ந்தவரிடம் சென்று ஒரு வாறு பிரமதர்க்கம் என்கிற தர்க்கசாஸ்திரம் ஒன்று உண்டோ வென்று கேட்டவரில்லையென்று வெளியாகுறது. மேலும் இவ்வளவு தர்க்கசக்ஸ்திரபயிற்சியுள்ள இவரே தாம் எடுத் தெழுதிய வியாப்திதோஷம் என்கிற சொல்லை ஸ்தாபிக்க வெழுந்து அவ்வியாப்தி என்றும் அதிவியாப்தி என்றும் இரு வகை இலக்கணக்குற்றங்களை எடுத்துச் சொற்சுருக்கமாய்க் கூ றியதாயும் இதையறியாது சொன்னதைச்சொல்லும் கிளியை ப்போற் பகுத்தறிவில்லாத நாம் இந்த சொல் புஸ்தகங்களிலு ம் மற்ற வித்துவான்களின் விவகாரத்திலும் காணோம் என்று எழுதியது தமக்குப் பெருநகைவிளைக்குறதென்றும் எழுதினர். இதுகொண்டு இவர் திருவாக்கின் பலத்தால் அவ்வியாப்தி அதிவியாப்தி இரண்டிலும் வியாப்தி என்கிற சொல்லிருத்த லால் இரண்டும் வியாப்தியாகுங்கால் அசத்து சத்து அதிசத்து இம்மூன்றும் சத்தும் அயோக்கியம் யோக்கியம் இவ்விரண் டும் யோக்கியம் என்றும் அநீதி நீதி இரண்டும் நீதியெனவும் அபாவம் பாவம் இரண்டும் பாவம் எனவும் பகுத்தறிவுள்ள வர் வழங்குவதாய் ஏற்படினும் அவ்வகை பகுத்தறிவு தற்கா லம் நமது நண்பரிடமே கண்டோம். இதுநிற்க. நாம் ஒரு தேசமாவது நாத்திகர் நிறைந்தது இல்லையென்று எழுதிய தைக்கண்டு அதனால் நாத்திகருக்கு வரும் குறை யாது என்று நமது நண்பர் கேட்டதற்கு யாம் (தேசங்கள் க்ஷேமம் அடை வது மதங்களின் பிரயோஜனங்களில் ஒன்று என முதல்பத்தி ரிகையில்தானே விரித்தாமாகையால் ஒருதேசம் முழுவதும் நாத்திகம் நிறைந்தால் ஆங்கு உலகக்ஷேமங் குறையுமென்பது கருத்தாம்) என்று விடைகொடுத்தது மிக விரோதமுள்ளதா யும் மனிதரைச்சுட்டிக் கேட்டகேழ்விக்கு இடத்தைச்சுட்டி விடைகூறல் மிடில்ஸ்கூலில் பரீக்ஷைகொடுத்தவரும் பரிகசிக் கத்தக்கதாயிருக்க இவர் எவ்விதம் மற்றபாஷையை அலக்ஷியம் செய்கிறார். இவர் இவ்வளவு புல்லறிவர் என்று நாம் கனவி லும் நினைத்தோமில்லையென்றும் எழுதினர். இவ்விடம் நம து நண்பர் நம்மிடத்து இதுகாறும் நிறுத்திய ஒரு பெரிய எண்

[illegible] [தொல்காப்பியம்] [illegible] "[illegible]" [உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே] [illegible]

ணம் இன்று விட்டதுபோலவே நாம் இவர் எந்த வாக்கியத்தையும் ஆராய்ந்து அவற்றில் குற்றமுளதேல் எடுப்பாரென்றும் இலலாவிடில் நடுநிலைமையில் நின்று மற்றவர் வார்த்தைகளையும் ஒத்துக்கொள்ளுவார் என்றும் எண்ணியிருந்ததும் விலகியது. இவ்விடத்தில் உலகம் என்கிற பதத்தை நிலத்தைக் குறிப்பதாய் எண்ணி அவர் இக்குற்றத்தை எடுத்துக்காட்டினரன்றி "இவர் உலகத்துக்காகப் பாடுபடுகிறார்,, இதனால் உலகம் க்ஷேமமடையும்,, என்று தொடங்கிய விவகாரங்களிலும் "அகரமுதல வெழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றேயுலகு,, என்னும திருவள்ளுவநாயனார் குறளிலும் அதின் பேருரையாய பரிமேலழகர்உரையில் (ஈண்டு உலகம் என்பது உயிர்களின் மேல் நின்றது) என்பதைச் சற்றாராய்ந்துபார்த்து பிறகு நம்மைப் பரிகாசம் செய்யப்புகின் இடம் கிடைக்காது என்று எண்ணி அதைச் சிறிதுங் கவனியாது தமது பரிகாசாஸ்திரத்தாணியில் கைவைத்தார். இவர் தாம் அறிந்த தர்க்கசாஸ்திரத்துடன் உலகம் என்கிற பதத்தைச் சிறிது ஊன்றிப்பார்ப்பாரேல் அதின் உண்மை வெளியாகி அதின் மூலமாய ([illegible]) என்னும் வடமொழிப்பகுதி மனதில் படும். ஆங்கு அதற்கு பொருள்விசாரித்தால் ([illegible]) என்னும் கோசத்தால் இப்பதம் இடத்தையும் உயிர்களையும் குறிக்கும் என்றறிவார். இவருக்கு அம்மொழியிலுள்ள த்வேஷமே இதற்குத்தடை. மேலும் தொல்காப்பியனார் பொருளதிகாரம் புறத்திணையியலில் "உலகம் என்பது உயர்ப்தோர்மாட்டே,, என்று எழுதியதும் இவர் காதில்பட்டிராது. இனி திருக்குறளும் அதின் திருவுரையும் ஆத்திகர்கள் எழுதினர். ஆதலால் ஆத்திகர்கள்கொண்டவழி நமக்குதவாதென்று எண்ணி ஒருக்கால் தாம் அந்தவழி பொருள் எடுத்துக்கொள்ளாமல் விட்டிருந்தாலும் இருக்கக்கூடும. இதுவும் நிற்க. 52. ரெ. ல் மதங்கள் பிரயோஜனம் ஒற்றுமை சித்திக்கும் என்று எழுதியதைக்குறித்து தூஷிக்க எழுந்தது மதங்களின் பிரயோஜனங்களில் ஒற்றுமையும் உலகக்ஷேமமும் சேர்ந்தது என்று நாம் எழுதியதைக்கண்டு இவைகளுக்குத் தக்க யுக்தி ஒன்றும் எடுத்துக்காட்டப்படவில்லை என்றும் அவ்விதம் சம்பவிப்பது முற்றிலும் கதையினும் கேட்டதில்லையென்றும் எழுதினர். எழுதியதை எழுதிவருவது இவரைப்போன்ற பத்திராதிபர்களுக்கு அழகேனும் நாம் எழுதவேண்டிய விஷயங்களை எழுதுவதே நமது பத்திரிகைக்குப்போதுமானதாதலால்நம்மால்ஒருவாறுமுதல்பத்திரிகையில் "மதமும் அதின் பிரயோஜனமும்,, என்னும் தலைப்பின்கீழ் எழுதப்பட்டவிஷயங்களை சிறிது கவனித்துப்பார்க்க நமது நண்பர் சித்தம் சிறிது சிரமம் எடுத்துக்கொள்ளும்படி அவரதுசுபாவத்தை வேண்டிக்கொள்ளுகிறேன். மறுபடியும் தேசக்ஷேமமென்பது நிலவளத்தைக்காட்டுவதாய் எண்ணியே மழைமுதலியவற்றால்தான் அது கூடும் என்றும் எழுதி இம்மதங்கள் நிறைந்த இந்த இந்துதேசத்தில்மாத்திரம் வாந்திபேதிமுதலிய விஷயங்கள் இல்லையோ? என்றும் கொலைமுதலிய துஷ்டநடைகளும் கிடையாதாவென்றார். அதுவும் நாம் முதற்பத்திரிகையில் எழுதியபடி ஒற்றுமையால் உண்டாகும் உலகக்ஷேமத்தையே நோக்கி எழுதியதாதலால் இவ்வாக்ஷேபம் பயன்படாது. நிற்க. மதங்களால் ஒற்றுமை கிடைக்கும் என்றது வேற்றுமையால்தான் சைவர் சமணர்களைக் கழுவேற்றினரோ?

[illegible]

என்று தொடங்கி நேற்று நடந்த சேலம் கலகம்வரையில் எழுதி இதற்கு மதமே காரணமோ? என்று கேட்டார். உன்னிப் பார்த்தால் அந்தவிடத்தில் ஒவ்வொரு மதஸ்தர்களின் ஒற்றுமையே விஸ்தாரமாய தெரியவரும். ஆனால் இவர் ஒற்றுமை என்பது பலர் ஒன்றுபட்டு (பொதுவாய் சுகதுக்கங்களை அனுபவிப்பதன்றி வேறு யாதென எண்ணினரோ அறிகிலேம்.

"மனம் என்பது இது; அதின் இலக்கணங்கள் இன்னவென்று நிருபிக்கவேண்டிய நமது நண்பர் "மூளையென்பது மனதிற்கு ஸ்தானந்தான் என்றும் அதற்கு அறியுத்தன்மை இல்லையென்றுகூற; அதன்மேல் மனம் என்பதுதான்யாது? என்று யாம் வினவ; அதின் அறிவின் தெளிவென்றும்; அறிவு யாது? எனில் அது புலனுணர்ச்சியென்றும் புலன் யாதெனில் அவை கருவிகள் என்று ஓரிடத்திலும் தரித்து நிற்காமல் ஓடி ஓடி மறைந்தால் இவரைப் பரிகாசம் செய்யாமல் வேறென்னசெய்யலாம் என்றும் எழுதினர். இதனால் நாம் அவர்கேட்ட கேழ்விகளுக்கெல்லாவற்றிற்கும் விடைகொடுத்ததும் அவ்விடைகளில் ஒன்றும் குற்றம் இல்லாமல் இருக்க அதின்பேரில் குற்றம் சொல்லமுடியாது நாம் கேட்டதுக்கெல்லாம் மறுமொழி கொடுத்து வருவதும் ஓரிடம் தரிக்சாமல் ஓடுவதானல் மனம் என்பது யாதென்றால் நாம் பிறகு சொல்லுவோம் என்றாவது மனம் மனமே என்றாவது அதற்கு நீர் எந்த பொருள் கொள்வீரோ அதுவே நமக்கும் என்றாவது இலக்கணம் சொன்னால் அதுவே ஓடாமல் நிற்பதாகுமோ ஏதோ அறியோம். இப்பத்திரிகாசாரியர் ஒருவர் எல்லா விஷயத்திலும் பரிகாசாஸ்திரத்தை பிரயோகிப்பதற்கு பதில் யாம் நமது பிரதிவாக்கியாஸ்திரத்தாலன்றி வேறேவழி எதிர்ப்பது எப்பொழுதுமில்லை. மேலும் நமது முன்னோர் நாத்திகத்தை கண்டித்தது யேது என கேட்டபொழுது நாம் அதற்காக ஏற்பட்ட சில முக்கிய கிரந்தங்களை எடுத்து எழுதினோம். அந்த கிரந்தங்களை முற்றிலும் மொழிபெயர்பபது அதில் உள்ள எல்லாவிஷயங்களையும் சுருக்கி எடுத்துக்காட்டி வரவேண்டியதும் இந்தவிடத்துக்கு சம்பந்தமுளளதல்லவென்று விட்டோம். "ஆத்மாவையும் சரீரத்தையும்பற்றி எழுதிவரும் விஷயத்தில் நவில் நாத்திகத்தை மறுத்த புஸ்தகங்களின் மொழிபெயர்ப்புக்கு இடம்கொடுப்ப உசிதவல்லதெனும் இவர் நாஸ்திகத்தை ஸ்தாபிக்க "கடவுன்மை குறித்து நாம் பார்த்துவரும் சுமார் ௬. மீ பத்திரிகைளுக்குள் எழுதினர் இல்லையாதலால் அவசியம் எழுதுவாரே அப்புஸ்தகங்களில் உள்ள நியாயங்களால் கண்டிக்கும்பொழுது அவைகள் வெளிக்கு வரக்கூடியவையாகும். இதற்கு என இவர் எழுதிய தென்னாலிராமன் கதைபோன்ற கதைகளை எழுதி பத்திரிகை நிரப்புவது நமக்குசிதமல்ல. அவர் எழுதியதால் அவர் யாம் எழுதிய புஸ்தகப்பெயர்களுக்கே பொருள் அறிந்திலையென விளங்கினும் இனி நாம் எழுதப்போகிற மதாசரியர் சரித்திரத்தொடரில் அந்நூலாசிரியர் சரித்திரத்தின்கண்ணே தெரிந்துகொள்ளுவார். இப்பத்திராதிபர் பிறந்த குழந்தைக்கும் ஜீவனுண்டே மனம் உண்டா என்று நாம் கேட்டவாறு இவர்கூறிய மனோதத்துவத்தை சுட்டியே மனம் எனும் பதம் பிரயோகித்தோம் என்று எழுதி யாமும் எல்லோரும் குழந்தையாய் இருந்தகாலத்தில் மனம் இருந்ததாய் இப்போதும் அப்போதும் தோன்றவில்லை எனவும் தாம் கொ

[illegible]

ட மனவிலக்கணம் மேலே காட்டப்போகிறத'கவும் கூறுகின்ருர். இவர் இப்பொழுதும் அப்பொழுதும் ஆலோசித்துப்பார்ப்பாரேல் அக்காலத்தில் ஜீவன்மாத்திரம் இருந்ததாகவாவது ஐம்புலன்சள் இருந்தாகவாவது புலப்படாதாதலால் அப்பொழுது இருத்தலே பொய்யாகுமல்லவா? மேலும் தற்காலத்து தமது முதுமையைக்கொண்டு இளமையை அனுமானித்தாவது அல்லது ஆப்தவாக்கியத்தினுலாவது அறியலாம் எனின் அப்பாழுது மனமுள்ளவன் செய்கைகளைக்கண்ட மற்ற ஆட்தவசனத்தினுலாவது, அனுமானத்தினுலாவது பனதையும் அறியக்கூடும்- அனுமானமும் ஆப்தவாக்கியமும் பிரமாணங்களாகா பிரத்தியக்ஷமே பிரமாணமென இவர் மறுப்பாரேல் அக்காலத்து ஜீவனிருந்ததுமட்டில் இவர் எவ்விதம் அனுபவத்தில் கொணர்ந்தனரோ அறியோம். ஆனுல் அவரது சுயக்கியானம் அவ்விதம் கண்டுபிடிக்குமெனின் அது மனத்தைமாத்திரம் ஏன் விலக்கியதோ தெரியவில்லை.

ஆத்மா சரீரத்தின் வேருகுங்கால் சரீரத்தின் புறத்தேயிருக்கும்; என்றதற்கு விடையாய் வீட்டின் உறுப்புகளில் சேராத மனிதன் வீட்டிலிருப்பதும் அதில் ஓர்பாகம் கெட்டால் ஓடுவதும் கண்டோமாதலால் ஜீவன் சரீரத்தில் குடிகொள்வதும் அதின் சிலபாகம் கெட்டால் அதை விடுவதும் உசிதமே என்று நாம் எழுதியதில் சரீரத்தின் ஓர்பாகமாகிய கைகால்முதலியவற்றின்கெடுதலுண்டாகியும் ஜீவன் அதிலிருப்பதாலும் குளோபாரம் என்னும் மயக்கவஸ்துவினுல் சரீரம் பிணபோலாயும் ஜீவன் அங்கிருப்பதாலும் சரீரதின் வேருய் சொல்வது எவ்விதம் என்று ஒருவாறு கர்ஜ்ஜித்தார்-ஐயா இதுவும் வேடிக்கை ஓர்மனிதன் ஓர்வீட்டில் இருப்பானேல் இவனிருக்கக்கூடிய முக்கியஸ்தலம்மாத்திரம் கெட்டால் அதையவன் விடவேண்டிவருமேயொழிய மற்றவிடத்துவிடவேண்டியதென்பது அனுவசியமல்லவா? மேலும் வீட்டின்வழிகள் அநேகமாய் மூடியிருந்தால் அதை கண்டதுமாத்திரத்தில் உள்ளே ஒருவருமில்லையேன்று வேறுகாரணமில்லாமல் சொல்லத்துணிவது எம்போலிகளுக்குமுசிதமல்லவே? ஆகையால் இனி வீண்வார்த்தைகளை விட்டு இவரது சாஸ்திரப்பயிர்ச்சிக்கும் கௌரவத்துக்கும் ஏற்றபடி நல்லவிஷயங்களால் பத்திரிகை பரிமளிக்கசெய்வாரென்று ஒருவாறு நமது நண்பர் ம-ா-ா-ஸ்ரீ தத்துவவிவேசினிப் பத்திராதிபரைக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

கடிதங்கள்.

கடிதக்கார் அபிப்பிராயத்திற்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

ஸ்மார்த்தப் பிராமணர்களுடைய உட்பிரிவு-

ஐயா,—ஆதிகாலத்தில் ஏற்பட்டிருக்கிற மனுஸ்மிருதிமுலானவைகளில் மனிதர்கள் சாதாரணமாய் நாலுவகுப்பா பிரிக்கப்பட்டுப் பிறகு மதஸ்தாடனங்கள் ஏற்பட்டிருக்கிறதா. வெளிப்படுகிறது- இதில் ஒவ்வொரு வகுப்பாருக்குள்ளும் அநேகம் உட்பிரிவுகள் தற்காலத்தில் தோன்றியிருப்பதர்கு மூலம் இன்னதென்று தெரியவில்லை- அதில் ஸ்மார்த்தப்பிராமணர்களைப்பற்றிமட்டும் நான் இம்பொழுதுபிரஸ்தாபிக்கிறேன்:

[illegible] (குளோரபாரம்) [illegible]

[illegible]

[illegible]

[illegible]

அவர்களுக்குள், வடமாள், அஷ்டஸஹஸ்திரம், பிருஹசரணம், வாத்திமாள், கேசியாள், சோழியாள் என இப்படிப் பல உள் வகுப்புகளும், அந்தந்த வகுப்புகளும் அந்தந்த வகுப்பிற்குள் பல உட்பிரிவுகளும் தோன்றி விவாகம் முதலான சம்பந்தத்தைப் பரஸ்பரம் இழந்தவர்களாக விருக்கிறார்கள்- பாஷையிலும் லௌகிக வைதிக ஆசாரங்களிலும் தற்காலத்தில் இவர்களுக்குள் முக்கியமான பேதங்கள் இருப்பதாகத்தெரியவில்லை- ஆனால் இந்து தர்மசாஸ்திரம் விவாக நிபந்தனையில் சாதியும் மதமும் ஒன்றாயிருக்கவேணுமென்று விதிக்கப்பட்டிருக்கிறது- ஜாதியென்கிற பதத்திற்கு ஏதாவது வியாக்கியானம் இருக்கிறதா? அப்படியில்லாவிட்டால் ஒருவர்க் கொருவர் விவாகசம்பந்தம் செய்துகொள்வதற்குத் தடையாய் வேறு ஸ்மிருதிகள்முதலானது எதாவது ஏற்பட்டிருக்கிறதா? எந்த ஆதாரத்தின் பேரில் மேற்கண்ட பந்துக்கட்டுகள் உண்டாயிருக்கிறதோ அதை நான் அறியும்பொருட்டுச் சில பண்டிதர்களை நான்கேட்டதில் புராதனமாய் நடந்துவருகிற வழக்கத்தைத்தவிர அதற்கு வேறு ஆதாரமில்லையென்று சொல்லுகிறார்கள்- இந்தப்பந்துக்கட்டுக்கு விரோதமாய் ஒரு சம்மந்தம் நடந்தால் அதற்கு ஏதாவது பிராயச்சித்தம் உண்டா வில்லையா? இந்தச் சந்தேகங்கள் நிவர்த்திக்கப்படுமாகில் விதவா விவாகம் கூடுமென்று வாதிக்கிறவர்களுக்கு ஏதாவது அனுகூலம் கிடைத்தாலும் கிடைக்கலாம்- இப்படிக் கேட்டதனால மேற்சொன்ன பந்துக்கட்டை மீறிநடக்கவேணுமென்பது எனது கோரிக்கையல்ல- அதின் மூலத்தைப் பிராமணர்கள் எல்லோரும் தெரிந்துகொள்ளவேண்டியதுமட்டும் அவசியம் என்று நினைக்கிறேன்- அப்படியில்லாவிட்டால் கலியின் மகிமையினால் பிராயச்சித்தமில்லாத தோஷங்கள் சுலுவாய்ச்சம்பவிக்க ஹேதுவாயிருக்கலாம்- இதைப்பற்றி "ப்ரம்மவித்தியா" பத்திராதிபராவது, மறுமொழிசொல்லத்தக்க இதர வித்துவான்களாவது தயைகூர்ந்து விடைதரவிரும்பும்

ஓர் சந்தேகி.

ச - மி

ஸ்ரீ ப்ரம்மவித்தியா பத்திரிகாதிபதி அவர்கள் சமூகத்துக்கு அநேககோடி வந்தனம்-

---

இதனடியில்கண்ட ஜகத்குரு ஸ்ரீமத் சங்கரபகவத்பாதாசாரியசுவாமிகளவர்கள் பூஜாவிஷயத்தைப்பற்றிய சங்கதிகள் என்னைப்போன்ற மந்தாதிகாரிகள் எளிதில் அறியும்பொருட்டு தங்களுடைய ப்ரம்மவித்தியா பத்திரிகையில் பிரசுரஞ்செய்ய வேணுமென்று வணக்கத்துடன் பிரார்த்திக்கிறேன்.

அதாவது, அத்வைதமத பிரதிஷ்டாபனாசாரியராகிய ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகள் லோகோபகாரமாய் அத்வைதபாஷியங்கள்செய்தும் அசர்க்கனுசரணியாய அநேக கிரந்தளியற்றி சம்சார சாகரத்தில் மூழ்கிக்கிடக்கும் ஜனங்களுக்கு ஞானமார்க்கத்தைக்காட்டி கடைத்தேறச்செய்தபடியால் லோககுருவென்றும் ஜகத்குருவென்றும் ஷண்மதஸ்தாபனாசாரியரென்றும் வேதமார்க்க பிரதிஷ்டாபனாசாரியரென்றும் லோகத்தாரால் கீர்த்திக்கப்படுகிறார்-

அந்த மகா சுவாமி செய்த லோகோபகாரத்தினாலல்லவா ஜனங்கள் அஞ்ஞானாந்தகாரத்தினின்று கடைத்தேறுவது- அப்படிப்பட்ட ஞானதாதாவாகிய சத்குருவினுடைய அவதார

[illegible]

தினங்களில் அத்வைதமதஸ்தர்களில் பெரும்பாலோர் குருவாராதனைசெய்யாமலிருக்கக காரணமென்ன?

அன்னிய மதஸ்தர்கள் அவரவர்களிட குருதினங்களில் அவர்கள் செயயும் குருவாராதனையின் சம்பிரமமானது எழுதிமுடியாது- அத்வைதிகளில் பாஷியசாந்தியானவர்களிலும் சிலரே பக்தி சிரத்தையுடன் ஆராதனம் செய்கிறார்கள்- அநேகம் பேர் உபேக்ஷைபாகஇருக்கிறார்கள்- அவர்களைக் கேட்டால் சரியான உத்திரம் கொடுக்கிறதில்லை- குருபூசை செய்யப்பட்டவர்களைக் கேட்டால் பண்டிதர்களும் பாமரர்களும் குருபூஜை செய்யவேண்டியதே என்று சொல்லுகிறார்கள்- ஆனதால் தங்களுடையபத்திரிகாமூலமாய் தெரிந்துகொள்ள இச்சிக்கிறேன்.

ஸ்ரீமத் சங்கராசாரியசுவாமிகளுடைய தினம் எப்போ? அன்று செய்யவேணடியகிரியை யென்ன? பூஜாகிரமம் எப்படி? இதுமுதலான விஷயங்கள் லோகோபகாரமாய் தாங்கள் சுருதி ஸ்மிருதி புராணாதி வசனங்களைக்காட்டி ப்ரம்மவித்தியா பத்திரிகையில் பிரசுரம் செய்யவேண்டுமென்று தங்களுடைய கனத்தைக் கோருகிறேன்.

ஸ்ரீ சங்கரகுரு பக்தப்பிரியன்.

இந்துதத்துவபிரபாவம்.

நமது முன்னோர்கள் பிரதமத்திலேயே தத்துவக்கியானிகளாக விருந்தார்களென்பதற்கு அன்னோர்சாத்திரங்களே போதிய ஆதாரமுடையவைகளாகவிருக்கின்றன- பல வேறுவிதமான தத்துவாம்ஸ தாத்பரியங்கள் நாளுக்குநாள் பரவிவந்ததென்பது வேதத்திலே, (பிராமணம்)என்னும் அம்சத்திலேகாணலாம்- உபநிஷத்து ளிலும் இதனது உண்மை விளங்கக்காணலாம்- இவர்கள் பரிபாலித்துவந்தநூல்களே-நியாயம், வைசேடிகம், சாங்கியம், யோகம், பூர்வமீமாம்ஸம், உத்ரமீமாஞ்சம்- இவற்றை முறையே செய்தவர்கள் கௌதமர்-கணாதர்-கபிலர்-பதஞ்சலி-சைமினி-வாதராயணர்-அல்லது வேதவியாசர். இவர்கள் அனைவரும் தத்தம்நூலை நியாயநூலின் பிரமாணத்தைக் கொண்டே செய்தவர்களாதலாலும், அந்த நியாயநூலிற் கூறும் பதார்த்த இலக்கணங்களில் காரணரூபமாகிய ஒவ்வொரு பரமாணுவும் நித்தவியாபகமென்கின்றமையானும்,எல்லாப்பதார்த்தங்களும் அணுச்சையோகமேயாதலாலும், காரணம் எத்தன்மைத்தோ அத்தன்மைத்தாகவே அதன் காரியமு மிருத்தல்வேண்டுமாதலாலும், பரமாணுவின் காரியமாகிய பதார்த்தம் நித்தியமென்பது நாட்டப்பட்டது- இந்தச் சித்தாந்தத்தை ஆங்கிலேயர் [மேடீரியாலிஜம்] என்கின்றார்கள்- சிலர் டார்க்கப்பட்ட உலகாதி சகலபதார்த்தங்களும் உண்மைப்பொருள்கள் அல்லவென்றும், அவை விசாரணையில் சொரூப பேதப்படுகின்றமையால் சூன்னியமென்றும், அவற்றை அறியும் மனமே சகலமுமென்றும் சொல்கின்றார்கள் இதை ஆங்கிலேயர் [ஐடியாலிஜம்]என்கின்றார்கள்- மூன்றாவது வகுப்பினர்களாகிய இன்னுஞ்சிலர் தடக்குத்தோன்றுகிற சித்துசடமாகிய சகலமும் உலகாத்மகமென்றும், அதுவே கடவுளென்றும், உள்ளவை சகலமும் அவராற் சிருஷ்டிக்கப்பட்டதென்றும், எது எது எவ்வா

[illegible]

[illegible]

[illegible]

று என்னகாரணத்திற் கிருக்கின்றதோ அது அது அவ்வாறு இருத்தலேசரியென்றும் சொல்லுவர். இனி இம்முப்பகுதியினையுடைய தத்துவக்கியானங்களின் சம்பந்தாசம்பந்தங்களையும் தொந்தநிர்த்தொந்தங்களையும், பங்கமில்லாமல் சங்கையற அங்கை நெல்லிக்கனிபோல் இங்கெடுத்துரைப்பாம்- நியாயசாத்திரமானது, நமக்குப் புறம்பாயுள்ள பிரபஞ்சத்தினளவே நமது அறிவு விளங்கியிருக்கும் என்றும், அப்பிரபஞ்சத்தில் நமக்கு விளங்குகிற அறிவு ஐந்தேயென்றும், அவை சத்த பரிச ரூப ரச கந்தங்களையே அறியுமென்றும், இவற்றிற்கு ஆதாரமாகவும் உலககாரணமாகவும் உள்ளவை பஞ்சபூதங்களே என்றும் அதைத்தவிர வேறொன்றில்லை என்றும் கூறும்; வைசேடிகமோ நியாயத்திற்குச் சார்பாய் விசாரவிர்த்திசெய்து சகலமும் பரமாணுவின் காரியமே என்றும் மனமாதிகள் அநாதிநித்தியமாகிய அவ்வணுக்களின்பால் அந்தர்க்கதமாய் வியாபித்திருக்கின்றனவென்றும், அவையொருக்காலும் பிரத்தியேகமாகாவென்றும் நிரூபிக்கும்- இவை பிரத்தியேகமெனில் இதனைத் தற்காலம் அங்கிலேயர் [ரியலிஜம்] என்பார்கள். இன்னும் வரும்.

த - வி - னி.

கலியுகவித்தை.

ஐயா,—சிறிது கவனியுங்கள்! சில வாரங்களாய் இப்பத்திரிகையில் எழுதப்படும் "ஆன்மாவும் சரீரமும்,, என்கிற விஷயத்தில் சிற்சில குற்றங்கள் எழுதிவந்த நமது நண்பராகிய "தத்துவவிவேசினி,, பத்திராதிபர் அரசமரத்தைப்பிடித்தது அதனடிப்பிள்ளையாரையும் தொடர்ந்ததென்னும் பழமொழிபோல், இப்பத்திரிகாசாரியர் எழுதிய விஷயங்களிலும் இப்பத்திரிகையின் மற்றப்பாகங்களிலு மாத்திரம் தாம் கொண்ட கொள்கைகளுக்கு விரோதமிருப்பதால் தோன்றியவாறு அர்த்தஞ் செய்கின்றாரென்று எண்ணியிருந்தோம்- இப்பொழுது அப்பத்திரிகையைப் படித்ததில் கிணறுவெட்டப் பூதம்புறப்பட்டதென இப்பத்திரிகையைமாத்திரமல்ல மற்ற எல்லா சாஸ்திரங்களையுமே வேறுபொருள்படுத்தி அந்நூலாசிரியர் கருத்துக்கு நேர் எதிர்மறையாகக்கொள்வதே நமது நண்பருக்கியல்பென வெளியாயிற்று- 1887-ஸ் ஜனவரிமீ 2-உ வெளியான தத்துவவிவேசினியில் இந்துதத்துவபிரபாவம் என்னுந் தலைப்பின்கீழ் அவர் எழுதிய சில விஷயங்களைப் பார்த்து அடங்காத ஆனந்தங்கொண்டு அதில் உள்ளவை உண்மையென்று நம்பும் சிலரைநோக்கிவாஸ்தவத்தைவெளியிடவந்தோமேயன்றி அவர் எழுதியவற்றைத் தூஷிக்க வந்தாமில்லை- ஏனெனில், நமது தேசத்தில் தற்காலம் நமது பாஷையைக் கைவிட்டிருக்க இவர் அவற்றிலுள்ள நூல்களின் பெயரையாவது எடுத்து எழுதுகிறாரேயென்று நமக்கு அதுவிஷயத்தில்ஆனந்தமேவிடுகின்றது- ஆனால், பார்த்ததை முற்றிலும்பார்க்காமல் தான் கண்டதைக் கொண்டே பிறர் சித்தாந்தத்தை ஆழம்பார்ப்பது இவருக்கழகல்ல- இந்நண்பர் தாம் ஆங்கிலேயரிடம் கற்ற சில "இஜ,, ங்களிற்றானே நமது சாஸ்திரங்களை நுழைக்கப்பார்த்து நுழைத்தும் வருகிறார்- அது அந்தந்தக் கிரந்தங்களைப்பார்த்தால் முற்றிலும் பொருந்தா தமையும்- இதில் தொடக்கத்திலேயே தத்துவவிஷயங்களில் வேறுபாடுகள் நாளுக்குநாள் பரவிவந்தன,

[illegible] [ரியலிஜம்] இதி. [illegible]

[illegible]

[illegible] 2 - 1 - 1887 [illegible]

வென்பது வேதத்திலும் உபநிடதங்களிலும் இருப்பதாய்ச் சொன்னூர்- அதை இவர் கண்டுபிடித்த வேதம் எதுவோ? இந்தவிஷயம் எந்த உபநிடதத்திற் படித்தாரோ? அறியேம்! அந்த இடத்தையாயினும், [illegible]து அந்த வாக்கியத்தையாயினும், அல்லது அதின் மொழிபெ[illegible] பையாயினும் இங்கு எழுதினரில்லை- இதுநிற்க- தாம் எ[illegible]க்காட்டிய நியாயம், வைசேஷிகம், ஸாங்கியம், யோகம், பூர்வமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை இவைகள் இவர் சொந்தத்தில் வேறு செய்துவைத்துக்கொண்டனரோ? இவர் எழுதும் விஷயங்களை அவற்றிற் காணேமே! என்று சம்சயங்வராமலிருக்க இவற்றை இயற்றியபெரியோர் பெயர்களையும் எடுத்துக்காட்டி, பிறகு அவர்கள் கருத்தை வெளியாக்கவெழுந்து, முதலில் எல்லா நூல்களும் தர்க்கத்தை முதலாய்க்கொண்டனவாதலால் அத்தர்க்கநூலில் எல்லாம் பரமாணுக்களின் கூட்டமென்று காட்டப்பட்டது என்றும், அவைகள் நித்தவியாபகம் என்று ஆங்கு சொல்லப்பட்டனவென்றும், அதைச்சார்ந்த வைசேஷிகமும் மனமாதி எல்லாம் பரமாணுக்களான பூதங்களைவிட வேறில்லையென்றும், நியாயத்தை (மெடீரியாலிஜம்) பௌதிகதந்திரம் என்றும், வைசேஷிகத்தை (ரியலிஜம்) உண்மைநூலென்றும், பெயரிட்டழைப்பதாயெடுத்துரைத்தார்- இது மிகவிந்தை! இவ்விடம் காட்டிய நியாயம் முதலிய நூல்களெல்லாம் வெவ்வேறு தத்துவார்த்தசதாத்பரிய முள்ளனவென இவரே முன் எழுதி பின்பு எல்லாம் நியாயத்தை அனுசரித்ததென்றும், அந்நியாயமும் பௌதிகமாய் முடிவுபெறுமென்றும் எழுதி, உலகில் கடவுளின்மைகாட்டவந்த நூல்களாக அவைகளை எடுத்து விடுத்தார்- இஃதென்ன விபரீதம்! நியாயசாஸ்திரத்தொடக்கத்திலேயே கௌதமர் நாத்திகத்தை யொழித்து ஆஸ்திகத்தை நாட்டுவதே நியாயசாஸ்திரத்தின் பிரயோஜனமெனக் காண்பித்து "ஆத்திகப்பயிரைநாத்திகர்மேய்ந்துவிடாது[க்ஷணக்ஷாவொவரணவக] முள்வேலி யடைத்ததுபோல்,, என்று சொல்லி, தாம் இயற்றிய நியாயசூத்திரம் ரு. ச. அத்தியாயங்களில் ஈசுரன், மனம், இந்திரியம், ஜீவன் இவைகளின் ஸ்வரூபத்தை விளக்கியிருக்க, அவரையும் அவரது வாக்கையனுசரித்து தான் செய்த சூத்திரங்களில் மனதை "உள்ளிந்திரியம்,, என்றும், பூதங்களின் வேறாயும் நன்றாயெழுதியிருக்க, அந்த வைசேடிகத்தைச்செய்த கணாதரையும், முற்றிலும் ஈசுரன் இல்லையெனச் சொல்லத்துணிந்து வெளிவந்த இரண்டு இஜங்களில் எங்ஙனம் சேர்க்கத்துணிந்தனரோ? கொடுமை! கொடுமை!! நியாயசாஸ்திரம் பிரமாணம் ச- என்றால் மீமாஞ்சை சூ- என்றுரைக்கும்- அதையே ரு- என்று சொல்லும் சாங்கியம்- இவ்விதம் இருக்க; இவையெல்லாம் ஒரே பிரமாணத்தைக்கொண்டு வெளிவந்தனவென எவ்விதம் சொல்லப்பொருந்தும்? ஒருக்கால் இவற்றுள் அடங்கிய சாங்கியர் நிரீச்சுரவாதியாகையால் அவர் இவர்பால் நிற்பரோவெனில், அவரும் சரீரத்தின்வேறாய் ஜீவனையும், ஜன்மாந்திரத்தையும், சுவர்க்கம் முதலியவற்றையும் ஒப்பினர்- ஆதலால் அவரும் நிற்கார்- இவர்கள் எல்லோரும் ஒன்று என்றெழுதுவது மொட்டந்தலைக்கும் முழங்காலுக்கும் முடிபோடுவதாய் முடியும்- ஆதலால், தொந்தநிர்த்தொந்தங்களும் என்று எழுதியதற்குப்பொருள் அவரேயறிவார் இன்னும் வரப்போகிற விஷயங்களையாவது ஆலோசித்

[illegible]

துளமுதும்படியாய்ப் பத்திரிகையின்வாயிலாக நமது நண்பர் தத்துவவிவேசினிப் பத்திரிகாசாரியரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இதுவிஷயத்தில் நம்பாற் கோபஞ்செய்யாது தமது பத்திரிகையின்வாயிலாகவாவது "ப்ரம்மவித்தியா" பத்திரிகை வாயிலாகவாவது விடையளிப்பாரென்று எதிர்பார்க்கும்

ஓர் தமிழன்.

சுழுத்தியின்கண் உலகுண்டாவென்பது.

ஒரோவழிச் சாக்கிரமாவது இவ்வுலகு காணப்படும் நிலைமைத்தெனவும், சொப்பனம் இதுபோன்று காணப்படும் நிலைமைத்தெனவும், சுழுத்தி யிங்ஙனமன்றும் நிலைமைத்தெனவுங்கூறப்படுமென்க. மேலைச் சுழுத்தியின்கண் இவ்வுலகுளதாகிக்காணப்படுவதின்று? இந்நிகழ்ந்த ஆசங்கைகட் கியாது விடையென்க.

"நீரினுளதாய அதிநுட்பமாய கிருமி, நம் கட்புலனுக்குப் புலப்படுவதின்றேனும் பூதக்கண்ணடியின் துணையான் புலப்படுவது போன்று சுழுத்தியின்கண் உலகு புலப்படாதேனும் மனக்கருவிகொண்டு பார்க்கும்வழிப்புலப்படுகின்றதேயன்று? கண்ணடியிலலாவழிக் கிருமித்தோற்றங் காணப்படுவதின்றேனும் இதனாற் கட்புலனுக்குப் புலப்படாதொன்று கிருமித்தோற்றமின்றென்று சாதித்தல யாங்ஙனமியையும்? இதுபோன்று மனமின்றி நிகழும் சுழுத்தியின்கண் உலகின் தோற்றமின்றேனும் இன்றென்று யாங்ஙனங் கூறலமையும்?" "ஒராடவனுக்குப் பித்துசேர்ந்தவழி அவன்முன்னர்க் கட்புலனுக்குப்புலனாகாப் பொருள்கள் காணப்பட்டு அஃதொழியுஞான்று அப்பொருள்களுளவென்று கூறலியையுமோ? கண்ணின்பால் காசமென்பதோர் நோயணுகியவழி யொரேவொரு விளக்குப் பலவாகக்காணப்பட்டு அஃது நீங்கியவழி ஒன்றாகவே காணப்படுமெனின் காசமில்வழியும் விளக்குப்பலவென்பாருமுளரோ? யாண்டுமின்றென்க." "பித்துடையானுக்குப் புலனும் பொருள்கள் உண்மையன்று; காசததாற்காணப்படும் விளக்குகளுமங்ஙனமேயாம். பொய்யலது யாதென்க; வெறுந்தோற்றமெனப்படுதலின். நீரின் சண்ணதாய கிருமி அங்ஙனமன்று; உளதேயாமென்க. நுட்பவுருவினைக் கண்ணடி பெரிதாகக் காட்டுவதன்றி யில்லதை யுளதாகக்காட்டியதேயன்று. பித்தும் காசமும் இல்லதையுளதாகத்தோற்றச் செய்வன. இவற்றுள் கிருமியுவமானமே சிறப்புடைத்தாகலின் அதனையே யீண்டுலகுக்கெடுத்து நாட்டப்படுமென்க; உலகெனப்படுவது உண்மைப்பொருளாகலின்."

இன்னோர் கூறிய இவ்விரண்டு உவமானங்களான் நீரின்கணுளதாய கிருமியைக்காட்டக் கண்ணடி துணைக்கருவியாயும், எதிர்ப்பட்டபொருள்களும் விளக்குப்பலவும் காட்ட, பித்துங்காசமுமாய இவ்விரண்டும் முதற்கருவியும் துணைக்கருவியுமாக நிகழ்கின்றன. இவ்விருவகையுள் உலகுக்கு மனம் துணைக்கருவியாமா? அல்லது முதற்கருவியும் துணைக்கருவியுமாமா? எற்றென்க.

[illegible]

கண்ணடியில்லாஞான்று கிருமியுண்டெனக்கோடல், கண்கூடன்று; அனுமானமேயாம். அனுமானம் காட்சியன்றி நிகழ்வதாகாது. கிருமிகாணுவழிக் கடுகுமுதலிய நுட்பப்பொருளாற் கண்கூடாம். எற்றெனின், கண்ணாற்கண்ட கடுகுமுதலிய நுட்பப்பொருளினைக் கண்ணடி பேருருவாகக்காட்டுந்தன்மையான் கண்ணடி, யின்மையை உண்மையாகத் தெரிவிக்கும் ஆற்றலுடையதன்று; சிறியதனைப்பெரிதாகக்காட்டுந்தகையதே.

இப்பெற்றியானே கண்ணடியில்லாஞான்று கிருமி, காண்பதரிதாயினும் காண்டற்கரிய அதிநுட்பமென்றனுமானிக்கவேண்டற்பாற்றென்க. இதுபோன்று சுழுத்தியின்கண் வேறுபொருள்களேதுவினும் சிறிதாகவேனுங் கண்டாரிலராகலின், துணைக்கருவியாய கண்ணடியுவமானத்தான் உலகைச்சத்தெனல் யாங்ஙனமமையுமென்று கூறிமறுக்க.

சுழுத்தியின்கண் அறிபவனின்மையான் உலகைக்காண்டலெங்ஙனமமைவுடைத்தெனின், அறிபவனின்மையேதுவாகத் துணைக்கருவியுவமான மாத்திரமெவ்வாறு அமைவுடைத்து? அற்றேல், முதற்கருவியும் துணைக்கருவியுமாயவுவமானம் பொருந்தாமைக்குக் காரணம் யாண்டையதென்க. இஃதிற்க; அறிபவனின்றென்றோர்ஞான்றுங் கூறலமைந்திலது. இனியொன்றுமுணராது சுகமாகவுறங்கினேனென்று யாவரும் அனுபவமாகக்கூறுகின்றமையானும், விழித்தவழிக்கூறுவதன்றியுறங்குங்காலத் தனுபவமின்றெனின் உறங்கினேனென இறந்தகாலத்தனுபவமுரைக்கின்றமையானும், விழித்தவழிச்சுகானுபவமின்றுமாதலானும், உறங்கினனெழுப்பியவழி அவன் துன்புறலானும், அஞ்ஞான்றெய்திய சுகம்போன்று பிறிதொன்றின்மையானும், கிணற்றில் வீழ்ந்த பாத்திரமெடுக்கச்சென்றோனுக்கு அப்பாத்திரம் நீருட்கிடைப்பினும் புறத்தெய்தினன்றியுரைக்க ஏலாமையானே நீருட்பாத்திரங் கிடைக்கவிலதென்றுகூறல் அடாமையானும் சுழுத்திபவத்தையின்கண் அறிவுளதென்றே கூறல் அமைவுடைத்தென்க.

இதுகாறுங் கூறிப்போந்தமையானே உலகுக்கு மனம் முதற்கருவியும் துணைக்கருவியுமாமென்றும் சுழுத்தியின்கண் உலகின்றென்றுங் கூறப்பட்டதென்க.

சுழுத்தியின்கண் உலகின்றெனக்கூறின் விழித்திருக்குமேனையோர்க்குக் காணப்படுகின்றதேயெனின், அன்னோர் நிற்பது சாக்கிர நிலைமைத்தாகலின் காணப்பட்டதென்க. இதுகாறும் சுழுத்தியின்கண் உலகின்றென்றுரைக்கவந்தாமன்றிச் சாக்கரத்தன்றென்றொழிக.

இந்து.

சம்பாஷணை.

சாத்தன்- அறிவு முன்னா? அறிபடுபொருள்முன்னா?

கோத்தன்- அறிபடுபொருளேமுன்.

[illegible]

விவாதः

[illegible]

சா- அறிவை முன்னென ஏன் கூறப்படாது?

கோ- அறிவு ஒருகாலத்தில் தோன்றி நசித்தலாலென்க.

சா- அறிபடுபொருளே ஒருகாலத்தில் தோன்றி நசிப்பதாகக் கூறக்கூடாதோ?

கோ- அறிபடுபொருள் என்றுமிருக்கவும், அறிவு ஒருபோது தோன்றி நசிக்கவும் காண்கையால் அங்ஙனங் கூறக்கூடாது.

சா- அறிவே என்று மிருப்பதெனக் கூறற்கியைந்திலதோ?

கோ- அறிவு என்பது விஷயங்களின் வேற்றுமையை உணர்வது; அறிவெனினும், சித்தெனினும், திருக்கெனினு மொக்கும். அறிபடுபொருளென்பது அங்ஙன முணராதது; அறிபடுபொருளெனினும், அசித்தெனினும், திருசியமெனினும், சடமெனினும் ஒக்கும்; அதுவே உலகம். சரீரம், கருத்தரிக்குங்கால் அறிவின்றிப் பின்னருதித்துப் பிரேதத்திலின்மையாவதைக்காண்கின்றோம். இதனானே அறிபடுபொருளான சரீரம் கருத்தரிக்குங்காலத்தும் பிரேதமாங்காலத்தும் அறிவோடுகூடியதொன்றும் இருக்கின்றதாகவும், அறிவு இடைநடுவில் மாத்திரமிருந்து நீங்குவதாகவும் காணப்படுகின்றமையான் அறிபடுபொருளே முன்பெனவும், அறிவு பின்பெனவும் ஆகின்றன.

சா- உலகமானது அறிபடுபொருள். உலகமென்று கூறுங்கூற்றே அறிவின்கண்ணது. கடத்தைக் கடமெனவும், படத்தைப் படமெனவும் பகுத்துணர்ந்து கூறச் சடத்தாலாகா. அறிவே யறிந்துகூறவேண்டுவது. கருத்தரிக்குஞான்று அறிவில்லையென வுணர்ந்ததும் அறிவே; ஈற்றிற் பிரேதமென வுணர்ந்ததும் அறிவே; இடைநின்றகாலத்து அறிவோடு நின்றதென வுணர்ந்ததும் அறிவே. இங்ஙனம் முக்காலத்தும் அறிவு காணப்படுகின்றமையான், அறிவு ஓர்போதுமாத்திரம் தோன்றி மறைகின்றதென் றெங்ஙனங் கூறற்பாற்று?

கோ- ஓர் தேகத்தைச்சுட்டிப் பேசுங்காலத்து, அதுமட்டுமின்றன்றோ பேசவேண்டுவது? வேறு தேகத்தைப்பற்றியும் அதின்கணுள்ள அறிவைப்பற்றியும் பேசுதல் தக்கதன்றே.

சா- அங்ஙனமாயின் அத்தேகத்தையும், அத்தேகத்தின்கணிகழும் அறிவையும் சுட்டி மாத்திரம் பேசுதல்வேண்டும். தேகம் பிணமாங்கால் அப்பிணத்தின்கண் அறிவில்லை. அதனால் பிணமெனவும், உலகெனவும், அவை யுளவெனவும், இலவெனவும் அறிவதார்? வேறோர் அறிவு அறிகின்றதெனின், அவ்வறிவுக்கே வியஷ்டியான சரீரமும், சமஷ்டியான வுலகமும் தோற்றப்படுகின்றன. இதுகொண்டே அறிவு முன்னரென்றும். கருத்தரிக்கும் ஞான்றும், பிரேதமாஞான்றும் ஏனைய அறிவுக்கு அறியப்படுகின்றமைகொண்டு அறிபடுபொருளே முக்காலத்து முளதெனக்கூறுகின்றுமெனின், அறிவுக்கு வியஷ்டி சமஷ்டியான வுலகம் காணப்படுவதுபோன்று கருவையும், பிரேதத்தையும் காணு மறிவுக்குச் சமஷ்டியான வுலகமும், அதிலடங்கிய வியஷ்டியும் (வியஷ்டியில் பிரேதமும் கருவும்) காணப்படுகின்றன. இதனானே அறிபடுபொருள் முன்பெனவும், முக்காலத்து முளதெனவும், அறிவு பின்பெனவும், ஓர்காலத்தேயுளதெனவும் கூறவியையா.

[illegible]

கோ- அறிபடுபொருள் காரணம் அறிவு காரியமாகலின் காரணம் முக்காலத்ததெனவும், காரியம் ஓர்காலத்ததெனவும், காரணம் முன்பெனவும், காரியம் பின்பெனவும் யாருஞ் சம்மதமாக ஒப்புக்கொள்ளத் தக்கனவே.

சா- இஃது எமக்கும் உடன்பாடே- ஆனால் அறிவைக் காரணமென்றும் அறிபடுபொருளைக் காரியமென்றும் பகர்கின்றும்.

கோ- உலகம் அழிந்திலது; அறிவோ அழிவுறுகின்றது- ஆகலின், உலகம் முன்பெனவும அறிவு பின்பெனவும் கூறத்தகும்.

சா- அறிவு அழிந்திலது; உலகமோ அழிவுறுகின்றது- ஆகலின், அறிவு முன்பெனவும் உலகம் பின்பெனவும் கூறத்தகும்.

கோ- மஞ்சள் சுண்ணம் சேர்தவிடத்துச் சிவப்பு தருமம் தோற்றப்படுவதுபோன்று, பூதச்சேர்க்கையின்கண் அறிவு காணப்படுகின்றமையான் உலகு முன்னாகும்.

சா- கடலின்கணுள்ள நீரில் அலையாதி தோன்றுவதுபோல் அறிவின்கண் உலகு தோன்றுகின்றதாகலின் அறிவே முன்னாகும்.

கோ- கடியாரம் முக்காலத்தும் ஓட்டம் ஓர்காலத்து முள்ளனபோல், உலகு முக்காலத்தும் அறிவு ஓர்காலத்து முள்ளனவால் உலகே முன்னாகும்.

சா- கடியாரம் முக்காலத்தும் ஓட்டம் ஓர்காலத்து மிருப்பதுண்மைதான்- அதுபோல் அறிவு முக்காலத்தும் அறிபடுபொருள் ஓர்காலத்துமுள்ளதாக வுவமேயப்படுத்தல்வேண்டும்.

கோ- அறிவு சரீரத்தின்கண் ஓர்காலத்துக்காணப்படுந் தர்மம்; அது ஓர் பொருளன்று.

சா- அறிவின்கண் சமஷ்டி வியஷ்டியான உலகு ஓர்காலத்துக் காணப்படுந் தர்மம்; அது ஓர் பொருளன்று.

கோ- அறிவு தொழிலா? முதலா?

சா- உலகம் தொழிலா? முதலா?

கோ- உலகம் முதல்.

சா- அறிவு முதல்.

கோ- அறிவு எங்ஙனம் முதல்?

சா- உலகம் எங்ஙனம் முதல்?

கோ- அறிவு, அறிதலான தொழிலால் முதலன்று; தொழிலே.

சா- உலகம் தோற்றுதலான தொழிலால் முதலன்று; தொழிலே.

கோ- அறிவு முதலானற் பொருளென்னை?

சா- உலகம் முதலானற் பொருளென்னை?

கோ- உலகம் பூதக்கூட்டமேயாம்.

சா- பூதக்கூட்டத்தையன்றி யுலகிற்குப் பொருள் யாது? அப்பூதமும் தனக்குக் காரணத்தை நோக்க அணுவும், அஃதும் ஆராய்வின்கண் அபாவமுமாகுமே-

[illegible]

கோ- உலகில்லாவிடத்து அறிவு காணப்படுகின்றதா?

சா- அறிவில்லாவிடத்து உலகு காணப்படுகின்றதா?

கோ. சரீரமில்லாதகாலத்து அறிவுளதா?

சா- அறிவில்லாதகாலத்து சரீரமுளதா?

கோ- உலகைவிட்டு அறிவுளதோ?

சா- அறிவைவிட்டு உலகுளதோ?

கோ- அறிவு முக்காலத்துள்ள சத்தா?

சா- உலகு முக்காலத்துள்ள சத்தா?

கோ- பிராணனீங்கிய பின்னர் அறிவுள்ளதா?

சா- அறிவுநீங்கிய பின்னர் பிராணனுளதா?

கோ- ஓட்டமொழிந்த கடியாரத்தைக் காண்பதுபோன்று, உலகற்ற அறிவைக் காண்கின்றோமா?

சா- ஓட்டமொழிந்த கடியாரத்தைக் காண்பதுபோன்று அறிவொழிந்த உலகத்தைக் காண்கின்றோமா?

கோ- அறிவிலாவிடின் உலகிராதோ?

சா- உலகிலாவிடின் அறிவிராதோ?

கோ- நூதனமாய் ஓர் நகரத்தை யின்றுகாண்போமாயின், அஃது நேற்றின்று?

சா- இன்று நகரம் பிரத்தியக்ஷம்; நேற்றனுமானம்- இன்று அறிவில் பிரத்தியக்ஷம்; பிரத்தியக்ஷத்தில் நகரம்- நேற்றைப்பற்றி அறிவில் அநுமானம், அநுமானத்தில் நகரம்- எவ்வாறு நோக்கினும் அறிவே முன்னுகும்.

கோ- உள்ளவுலகு அறிவின்மையான் ஓடிடுமோ?

சா- உள்ள அறிவு உலகின்மையான் ஓடிடுமோ?

கோ- அறிவு எங்குளது?

சா- உலகு எங்குளது?

கோ- உலகு வெளியான இன்மையிலுளது.

சா- இன்மையிலுள்ளவுலகு இன்மையேயாகு மன்றோ?

கோ- பெட்டியிலுள்ள புத்தகமும் பெட்டியாமோ?

சா- இன்மை பூரணமாகலின், அதிலுள்ள உலகும் இன்மையேயாகும்- பெட்டி பூரணமன்றாகலின், அதிலுள்ள புத்தகம் பெட்டியாகாது.

கோ- உலகில்லா எவ்விடத்து அறிவு உளது?

சா- அறிவில்லா எவ்விடத்து உலகுளது?

கோ- உலகிற்கு அறிவு பின்னமா? அபின்னமா?

சா. அறிவிற்கு உலகு பின்னமா? அபின்னமா?

கோ- உலகிற்கு அறிவு அபின்னமே.

சா- அறிவிற்கு உலகு அபின்னமே.

கோ- அறிவைத் தனியே கண்டாருளரோ?

சா- உலகைத் தனியே கண்டாருளரோ?

கோ- அறிவு எவ்வண்ணமுளது?

சா- உலகு எவ்வண்ணமுளது?

இன்னும் வரும்.

ஓர் நண்பன்.

ப்ரம்மவித்தியா

அனுபந்தம்.

புத்தகம் - க.] கஅஅஎ - ஹு ஜனவரி-மீ ௩௰. [இலக்கம் - அ.

விடைகூறல்.

"உலகம் சத்தா? அசத்தா? என்பது." இவ்விடயத்தினைச்சுட்டி முன்னர் சுதேசமித்திரனிலும், பின்னர் பிரம்மவித்தையினும் வரைந்திருந்தாம். அதனை "ஹிதோபதேசியார்,, என்னும் நமது நண்பரொருவர் "தத்துவவிவேசினி,, என்னும் பத்திரிகையின்கண் தமக்குத்தோன்றியாங்கு பொறித்து விளக்கினர். அதனை 1886-ஹு அக்டோபர் மீ 30-உ பிரசுரமான பிரமவித்தையின்கண்ணும் காண்க. இனியெமக்குப்போந்தவாறு நிறுத்துவான் பின் வருமாறு வரைகின்றாம்:—

உலகம் சத்தா? அசத்தா? என்புழி யீண்டையுலகவிலக்கணமெனைத்துணையும் கூறதில்லாது ஏனையவிரண்டற்கு மிலக்கணமுணர்த்தியதெம்மாட்டுக்குற்றமென்றுணர்த்திய பின்னர், அவ்விலக்கணமுணர்த்திய தொடங்கும் தாமேனும் அம்மூன்றனுக்கு நன்குணர்த்தினரா? இன்றே. இவர் உலகினிலக்கணமே சத்துக்குமென்பதன்றி யுலகவிலக்கணமும் குருத்துவமுதலிய சில குணங்களையுடைய உண்மைப்பொருளே யென்றனர். அவ்விலக்கணத்தின்பா லுண்மைப்பொருளெனச் சேர்த்தற்குக் காரணம் யாதோ அறிந்திலமென்க. இவ்வாறு இலக்கணங்கூறிப்போந்து அதனையே சத்தெனக்கொண்டு இதனானே தாமிம்மூன்றனுக்கு மிலக்கண முணர்த்தியதூஉம் சாலவியக்கற்பாற்றேயாம்.

உலகம்; சத்து என்னு மிரண்டனுள் ஒன்றனுக்கிலக்கணமுணர்த்தி மற்றொன்றனை யிவருங் கூறாதொழிந்தனர். யாமுமவ்வாறே கூறாதொழிந்தாம். இதனானே நம்பால் யாது குறைவு? இன்னோர்க்கஃதேனின்று? இவர் உலகமே சத்து, சத்தே யுலகமென்றன்றோ வுணர்த்தினாரெனின் அஃதூஉமியையுடைத்தன்றென்க. அஃதங்ஙனமேல் இவ்வாசங்கை யாங்ஙன நிகழும்? கடம், கலசமா? படமா? என்றோ ராசங்கை யுளதேலஃதியையும். இவர் எடுத்துக்காட்டிய நிலக்கரி உலோகமா? கல்லா? என்னு மாசங்கையின்கண் நிலக்கரியென்பதூஉம், உலோகமென்பதூஉம் பரியாயபதமன்றே! இவற்றுள் ஒன்று சாமானியமும், மற்றொன்று விசேடமுமாமென்க. ஈண்டங்ஙனமின்றி யிரண்டுமொரோவொருபொருள் கருதியதெனக்கூறி, மீண்டுங் கூறியதுகூறலென்னுங்குற்றத்திற் கிடனாகாதியாங்ஙனந் தப்புவர்?

உலகமென்னுஞ்சொற்பொருளை நன்காராய்ந்துழி அஃது காணப்படுவதென்னும் பொருட்டதாகலின் காணப்படுவதென்பதற் குலமென்பதியையும். இன்னோர் சையாயிகநூல்வல்லுனர்போன்று வரைந்தனரேயல்லது சத்தநூல் வல்லார்போன்றல்லர். இஃதியாங்ஙனமெனின் காட்டுதும்:—

உலகமென்னுஞ்சொல் (லோக்) காண்டலெனப் பொருள்படும் வடமொழிப்பகுதியென்றுய்த்துணர்வரேல் உலகமென்பதுண்மைப்பொருளென் றெவ்வாற்றானுங் கூறத் துணியார். இனி உலகமெனினும் திரிசியமெனினு மொக்கும். உலகமென்னும் பதார்த்தவியல்பினை நன்குணர்ந்துகொள்ளு நிலையினன்றேயிவ்வாசங்கை யெழும்? அதனானே யிவ்வாசங்கையின் விடயமானவிரண்டுதன்மைகளையும் உணர்த்துவான் வேண்டியதேயின்றியமையாமையுடைத்தென்பதுகருதி யிவ்விரண்டினுக்கேயிலக்கணம் பரக்கக்காட்டினும். சத்து,அசத்தென்னு மிவ்விருசொற்களுக்கும் பொருள், உள் பொருளினையும் இல் பொருளினையுமே யுணர்த்தினமையே சாலுமென்பதனை வடநூல்வல்லார்வாய்க் கேட்டுணர்க. அங்ஙன முணரமாட்டாமையானே கடமென்னும்பெயர் தமிழ்நாட்டாரிட்டுவழங்குவதெனக் கூறியுள்ளார்.

"உலகம் அல்லது வஸ்து அல்லது பூதியம் என்பது தனக்கெனவோர் சொருபமின்றி முக்காலத்து நிகழு மெல்லாச்சொருபங்களுந்தாமாய்க் குருத்துவம், இயக்கம், ஆகருஷணம், திரிவு முதலியவற்றை யபின்னமா யாண்டுமுடைய வுண்மைப்பொருள். இதுவே சத்தென்றுஞ் சொல்லப்படும்,, எனக் கூறினர். உலகம் அல்லது வஸ்து அல்லது பூதியம் என்பது தனக்கென்றோர் சொருபமிலதென்று கூறிப்போந்த இவரே பிறண்டும் எல்லாச் சொருபங்களுந்தாமாயெனமுரணிக் குருத்துவம், இயக்கம், ஆகருஷணம், திரிவுமுதலியவற்றை யபின்னமாகவுடைய வுண்மைப்பொருளென்றனர். உண்மைப்பொருளிஃதென வெள்ளிடை மலைபோல விளக்காது குருத்துவமுதலனவற்றைவாளா கூறியதனாற் போந்த பயனென்னை? இதுவே சத்தென்றும் சொல்லப்படுமென்பதனுள் இதுவென்னுஞ் சுட்டெதன்மேற்று? அச்சுட்டினை யேற்கும் பொருளின்னதெனக் குறிப்பதற் கெனைத்துணையும் வகையின்றே! இதற் கியாதுகூறுவதெனக்கடாவியொழிக. "இந்தச் சத்தினுடைய அபாவமே அசத்தாதலானும், அசத்து யாண்டுமிலதாதலானும், இல்பொருளுக்கிலக்கணமு மின்றெனக,, என்றனர். சத்து இனைத்தென்றுணர்த்தாமே சத்தினபாவம் அசத்தென்றதூஉம், அசத்து யாண்டுமிலதென்றதூஉம், இல்பொருளிற் கிலக்கணமின்றென்றதூஉம் பயனில் கூற்றேயாமென்றொழிக. இது நிற்க;

இலக்கணக்குற்றஞ் சிலவெடுத்துக்கூறுவான்றொடங்கி இல்பொருளுக்கியையுமா வெனக்கூறினர்; அற்றேல் தாங்கற்ற தருக்கநூலில் அபாவ நான்கு மெற்றுக்கு மறந்தனரோ அஃதுணர்கின்றிலம். அற்றேல் அஃதாக.

இனி இலக்கணக்குற்றமெடுத்துரைக்கப் போந்து இலக்கியங்காட்டி நிறுத்திய தமைவுடைத்தன் றென்றனர். அஃது. நன்று! நன்று!! இதுநிற்க. சத்துக்குதாரணங் காட்டி[illegible] போலியென்றனர். அந்தோ! வியவகாரிக சத்து [illegible]

பாரமார்த்திகசத்தைஉணர்த்துவான் அங்ஙனமுரைத்ததல்லது உள்ளவாறு சத்தெனப்படுவது பிரமமேனும், விவகாரத்திற் காட்டுவோன் றொடங்கிய இதனைக்காட்டிநிறுத்தியதூஉமென்க-

காரணகாரியங்களனைத்தினுக்கு மூலமாயுள்ளது உலகப்பொருள்; அதனையே சத்தெனத்துணிந்தவர் இங்ஙனமேயன்று கடம் சத்தெனப்படுவதென்றனர்; யாம் கூறியாங் கஃது சத்தாகாதேனும் இவருரைத்தவாற்றான் சத்தாக வியைவதியாண்டையதென்க. இனி "உற்பத்தியாவது முதற்காரண மில்லாமலுண்டாவது,, என்றுரைத்துப் பிறண்டும் "உற்பத்திக்கும் உருமாற்றத்திற்கும் பேதமுணராமல் மயங்கி வாதாடுகின்றார்,, என்றனர்; இஃது நன்று! நன்று!! எம்மை வசை கூறுவானிப்புது விதி புனைந்ததூஉமன்றி "வைதிகிகள் சிருட்டியென்றுங்கூறுவர்,, என்றனர். இனி இவர் வரைந்த நூலினைக்கற்கப்புகுவார் அங்ஙனங்கோட லமையும். இவர் கற்றுணர்ந்த தருக்கநூலின்கண் உற்பத்திக் கிலக்கணம் முதற்காரணத்திற் றோன்றும் பொருள் முதற்கணத்தோடியையுடைத் தென்றன்றூ இயம்புந்தகைமைத்து? கணமென்பது (ஓர்காலநுட்பப்பகுதி) என்க-

கடமோ ருருவிற்குப்பெய ரென்றனராகலின் கடம் குணப்பெயரேயல்லது பொருட்பெயராதலெத்துணையு மியையாதென்க. அற்றேல் கடத்தைக் கொண்டுவா, கடத்தின்கணீரிருக்கின்றது இன்ன விவகாரங்களெவ்வாற்றானியையும்? உருவங் குணமாகலின் அதற்குத் தொழிலின்று- அஃது நீரிருப்பதற்கெவ்வாற்றானாதாரமெனற்பாலது? இவர், நாம் கூறிய இலக்கணத்தின்கண் வியாத்திதோடமுண்டென முன்னர்க்காட்டமுயன்று அத்தோடங்களைத்தாமறிந்ததுணையும் எடுத்துக்காட்டியும் இறுதியின்கண் எனைத்துணையும் பயன்படாது சென்றமையின் யாதோ சில கூறி விடுத்தனர்- சர்வவிரோதம் யாண்டுமுள்ளது ஒருபோது மில்லது என்றும், பாரிசேடவிரோதம் யாண்டுமுள்ளது யாண்டுமில்லது என்றும் இரண்டனுள்ளும் முற்கூறிய விரோதம் விசேடமென்றும், பின்னருரைத்ததை சாமானியமென்றும் கூறி, யாம் கூறிப்போந்தமையைச் சாமானியத்துளடக்கினர்- இவர் கூறியாங்கு முதல் விரோதத்தினுக்கும் மற்றொன்றினுக்கும் ஒருபோதுமென்னும் பதமும் அதன் பரியாயமாகிய யாண்டுமென்றதூஉம் சொன்மாத்திரையான் வேறுபாடுடையதேனும் பொருள் மாத்திரையான் யாங்ஙனம் வேறுபாடுடையதெனக் கடாவியொழிக- இன்னோரன்னவற்றை யிவரே நன்குணர்த்தவல்லுனர் போலும்- யாண்டும் வியாத்திதோடமென்பதனை மறவியின்றிக்கூறு மாற்றலுடையாராகலின் எந்நூலுள் எவ்வாசிரியர் கூறியுள்ளாரென்றையுறுவார்க்கு அதனைத் தெற்றென்றுணர்த்துவரென்க.

"நையாயிகரெல்லாரும் ஒன்றைக் காரணமென்றும், மற்றொன்றைக் காரியமென்றும் குறிப்பது சொரூபத்தை நோக்கியேயல்லாமல் வஸ்துவை நோக்கியல்ல,, வென்றும் காரணம், காரியம் இவ்விரண்டு மனோபாவனையென்றுங் கூறிப் போந்தனர்- இதனானே வஸ்து சொரூபமன்றென்பதுவே திண்ணமென்றன்று புலப்படுகின்றது? இது நிற்க- வஸ்து தனக்[illegible]ச்சொரூபமின்றென முன்னர்க்கூறிப்போந்து பின்னர் [illegible]ற்கே காரணமென்றுங் காரியமென்றுங் கூறிய தெற்றிற்கென்க- "மனோபாவனையால் காரணத்தை நோக்குழிக்காரியமும், காரியத்தை நோக்குழிக்காரணமும் இன்மையாகக்காணப்படினும் இவ்விரண்டிற்கும் நியதமாயுள்ள தெதுவோ அது எக்காலத்துமுள்ளதே, அதுவே சத்தென்பதும் வஸ்துவென்பதும் உலகமென்பதுமாதலால், உலகு அசத்தாதல் ஒருக்காலுமில்லை,, என்றனர்- காரியமும் காரணமு மனோபாவனையெனக்கூறிய வாற்றான் வஸ்துவின்கண் காரியமுங் காரணமு மின்றென்றே துணிபு- காரணத்தை நோக்குங்காற் காரியமென்ப தின்மையேனுங் காரியத்தை நோக்குங்காற் காரணமின்றென்றியாங்ஙனங் கூறற்பாற்று? மண்ணை நோக்குங்காற் கடமென்ப தின்மையேனுங் கடத்தை நோக்குங்கான் மண்ணென்ப தியாங்ஙன மின்மையாம்? "வஸ்துவோ காரணத்திற்கும் காரியத்திற்கு நியதமாயிருப்பது,, என்றுங் கூறியுள்ளார்- அவ்வஸ்து காரியமா? காரணமா? இரண்டினொன்றாகற்பாலதே துணிபு- காரியமெனின் அதற்குமோர் காரண முளதாதல்வேண்டும்- காரணமெனின் அஃது மற்றொன்றினுக்குக் காரியப்படல் வேண்டும்- இங்ஙன முடிபின்றிப்போதரலின் எல்லையின்மையென்னும் அனவத்தாதோடமெய்தும்- யாம் ஆண்டை அணுகாரணவாதமறுப்பு நன்குணர்த்தினுமாகலி னிவர் இறுதியின்கண் பொருளின்னதெனக் கூறிற்றிலர்-

இனி "உருத்திரிதலாவது ஒருரு மற்றோருருவாய்த் திரிதல் இதற்குதாரணங் கடமே,, என்றும், "கடவுருவமாறினு மண் மாறாது,, என்றுமுரைத்தனர்- உருவென்பது குணம்; மண்ணின்கண் யாதுகுண நிகழ்ந்தது? வளைதல், குவிதன் முதலனவெனின் எம்மண் அக்குணங்களையெய்திற்று? எனைத்துந் தலைப்பெய்தெனின் தனித்தனி மண்ணும் அக்குணத்தைச் சிறிது சிறிதேனுமெய்தினன்றிக் கூறற்பாற்றன்று- காரிய மாறினும் காரணமாறாதென்பதனான் வஸ்துவாகிய மண் மாறாதென்றனர்- யாது காரணமெனப்படுமோ அஃது மற்றொன்றினுக்குக் காரியமெனப்படுமே- இங்ஙனமாகலின் அழிவுபாடெய்தாக் காரணம் யாது? அக்காரணத்திற் குறுப்புளதா? இலதா? உளதாயின் காரணமெனக்கூறற் பாற்றன்று- இலதேல் காரியமாதற் கியையுடைத்தன்று. இது நிற்க:—

"வனைந்த பின்னும் அழிவுபாட்டிற்குமுன்னுங் கடமுண்டாதலால் கடம் யாண்டுமில்லதா யெங்ஙனமாகும்? கடம் யாண்டு மில்லதல்லாதபோது அசத்தெப்படியாகும்?,, என்றனர்- அற்றேல் வனைந்த பின்னரும் அழிவுபாட்டிற்குமுன்னருங் கடமுளதென்றிவர்க்கியாவர் கூறியுள்ளார்? யாம் அங்ஙனம் இதுகாறுங் கூறிப்போந்தோமல்லேம்- பெயர்த்தும் யாம் வரைந்ததனைச் சிறிது நோக்குங்காலஃது பூர்வபக்கத்தவர் துணிபென்றுணர்ந்து "கடம் சத்துமாகாமல் அசத்துமாகாமல் சங்கர சங்கேத நிலையினிற்கின்றது,, என்றெம்பாற் கூறிப்போந்தகுற்றமெனைத்துணையுங் குற்றமன்றெனத் தாமே தெரிப்பர்.

இனி, இவர் முன்னர்க்கூறிப்போந்தவுலகவிலக்கணம் வேறு; இறுதிக்கட் கூறிப்போந்த வுலகமென்னுஞ் சொற்பொருள் வேறு- அற்றாகலினன்றே தெள்ளிதினோர்ந்துணர்வாராக.

இந்து.

[illegible]

இதிகஸ்யசந வைஷ்ணவஸ்ய.

[illegible]

திவான்ஜி ஆபீஸ்றயிட்டர் திருவனந்தபுரம்

ப்ரம்மவித்தியா.

இப்பெயர் தரித்துலாவும் 4. பாரங்கொண்ட சம்ஸ்கிருத தமிழ் மாதாந்தரப் பத்திரிகை, தோன்றிச் சிறிதுகாலமேனும் பலர் கரங்களினும் நடைபெற்றுவருகின்றதைக் கேட்க மிகக்களிப்புற்றேம்- தொடக்கத்தில் வெறுப்புற்றவரும் இப்போது அருமை பாராட்டுகின்றனர்- இப்படிப்பட்ட பத்திரிகை யொன்றிருப்பது யாவர்க்கும் சந்தோஷம்- இதில் சுருதி, ஸ்மிருதி, புராணாதிகளின் உண்மை வெளியாகித் தத்துவவிசாரம் செய்வதற்கு மிக்க சாதனமாயிருக்கின்றது; எது எப்படியோ அதை அப்படியே கூறுகின்றது; உள்ளதை யொளித்து மாறிப்பேசுபவர்க்கு இது தலைச்சுமையாயிருக்கிறது- இதுநிற்க, இதை விருத்திசெய்ய ஒவ்வொரு மதாபிமானிகளும் முன்னிற்கவேண்டும்- இப்போதிருக்கும் 4- பாரத்தை 8- பக்கமாக்கினேமாயின் இன்னும் எவ்வளவோ விஷயங்கள் தெரிந்துகொள்ளலாம்- கையொப்பக்காரர் பலரும், இதுவிஷயத்தில் முயன்று தத்தம் அபிப்பிராயங்களைத் தெரிவிப்பாரானால், பத்திராதிபர் தக்க மறுமொழி கூறுவர்; அன்றிச் சந்தா இவ்வளவெனவு முரைப்பர்- அதற்குமேல் நாம் யோசிக்க இடமுண்டு. எங்ஙனமாயினும் ஒரு வருஷம் பொறுத்தே இந்த யோசனை செய்யவேண்டுவது- நம்மவர் நமது மதமறியாது புறமதத்தில் செல்லுமிக்காலத்து, இப்பத்திரிகையைப் பிரசுரஞ்செயயும் (ஸ்ரீ ஞானசம்பந்தசுவாமிகள் மரபிலுதித்த) லோகோபகார மூர்த்திகளான ப்ரம்மஸ்ரீ கு. ஸ்ரீநிவாசசாஸ்திரியாரவர்கட்கு யாம் புரியும் கைம்மாறு யாதிருக்கிறது? நமது வணக்கமுள்ள வந்தனமே- இவர் மாசம் (50) ரூபா வேதனமாக வரும் போதகாசிரியர் தொழிலையும் விட்டு எங்கெங்கும் சென்று பிரசங்கம் செய்து வரும் சங்கதியைக்கேட்க மனங்குழைகின்றது- பத்திரிகை நீடூழி வாழப் பரமேஸ்வரனைப் பிரார்த்திப்போமாக.

ஓர் கையொப்பக்காரனான ஏழை.

கவனிப்பு.

சென்ற டிசம்பர்மீ பத்திரிகையில் "வருகிற ஜனவரிமீ 30-உக்குள் சந்தாத்தொகையை அனுப்பிவிடாமலிருக்கும் கனவான்களுக்குப் பத்திரிகை அனுப்பப்படமாட்டா"தென்று தெரிவித்திருந்தோம். அதைக்கண்டபின்னரும் சில கனவான்கள் சிறிதேனும் கவனிக்காமலேயிருக்கிறார்கள். இன்னும் பாக்கியாயிருப்பவர்கள் சுமார் 50-வரையில் இருக்கின்றது. ஆனால், அவர்களிற் பலர்க்கு கனத்தைநோக்கியே அனுப்பப்பட்டபடியால் இனியாவது சிறிது கவனித்துச் சீக்கிரத்தில் அனுப்பிவிடுவாரென்று கருதி, இம்முறை நிறுத்திவிடாது அனுப்பியிருக்கிறோம்.

பத்திராதிபர்.